

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்: மா. பூங்குன்றன். க. மு; அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி த. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ. பொன். பாலகிருட்டிணன்.

(தொலைபேசி : 847329)

சுவடி 22] ௨௦௧௭ நளி (நவ-திசம்-1986) [ஓலை 12

தி. மு. க. நடத்தும் இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சி!

இந்தித்திணிப்பு என்பது இந்நாட்டின் சாவக் கேடு என்றே கருதவேண்டும். தமிழர்களுக்கு இந்தியை எதிர்ப்பதே பெரியதொரு போராட்டச் செயலாகப் போய்விட்டது. வேறு எந்த முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு, இந்தித் திணிப்பும் அதற்கான எதிர்ப்பும் தமிழர்களின் மூளையையும் நெஞ்சாங்குலையையுமே தின்று கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் உள்ள எழுபது கோடிப் பேரில் ஏறத்தாழ இருபது கோடிப் பேரே இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாக இருப்பினும், இவர்களுடைய வெறித்தனத்தினால், மற்ற ஐம்பது கோடிப் பேருக்கும் இந்தி ஒரு வாழ்க்கைச் சிக்கலாகவே அமைந்துவிட்டது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதே தீராத அரசியல் முயற்சியாக உள்ளது. இதுபற்றி நடுவணரசு துளியும் கவலைப்படாமல், மேலும் மேலும் பல துறைகளிலும் பல முறைகளிலும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இந்தியைத் திணித்த வண்ணமாகவே உள்ளது.

தமிழகம் கடந்த 1965 ஆம் ஆண்டு நடத்திய இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சியிலேயே நடுவணரசு உண்மையை நன்கு உணர்ந்து கொண்டு, இந்தித் திணிப்பைக் கைவிட்டிருக்க வேண்டும். ஆனால் வடநாட்டிலுள்ள இந்தி வெறியர்களின் மனப்போக்குக்கு உகந்தவாறு, நடுவணரசு நடந்து கொள்ளவேண்டியிருப்பதால், அது தமிழர்களின் கோரிக்கையையோ, எதிர்ப்பையோ ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாக உள்ளது.

நம்மைப் பொறுத்தவரையில் இந்தியெதிர்ப்பு என்பதைவிட, இந்திய அரசுக்கு எதிர்ப்பு என்பதே முழுப்பொருளும் தேவையும் பொருத்தமுமுடையதாகவும் கருதவேண்டியிருக்கிறது. ஆனால், நம் நாட்டுத் தலைவர்களுக்கு ஏதாவது அன்றாட அரசியல் போராட்டம் நடந்து கொண்டிருக்க வேண்டுமே! என்ன செய்வது? அதற்காக அவ்வப்பொழுது ஏதாவது ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு, மக்களிடத்தில் தங்களுக்குள்ள சாய்கால் போய்விடக் கூடாது என்று கருதுகின்றனர் போலும். அதன் பொருட்டாகவே கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளாக இவ்விந்தியெதிர்ப்புப் போராட்டம் இத்தமிழகத்தில் ஒரு தொடர் போராட்டமாக நடந்து வருகிறது. உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், இந்தியெதிர்ப்புப் போராட்டம் தேவையே இல்லை. நம் கருத்துகளுக்கு எப்பொழுது நடுவணரசு செவி சாய்க்கவில்லையோ, அப்பொழுதே, தமிழ் நாட்டு விடுதலையை முன்வைத்திருக்கவேண்டும். அதன்பிறகு வடநாட்டு வெறியர்களுக்கும் நமக்கும் ஆனது ஆகட்டும் போனது போகட்டும் என்று ஒரு கை பார்த்துவிடலாம். ஆனால் நம் நாட்டுத் தமிழ்த் தலைவர்கள் ஏனோ வடநாட்டுக்காரர்களின் கரிசனத்துக்கும் கடைக்கண் பார்வைக்கும் காலம் பார்த்துக் கிடக்கின்றனர். வெட்கக் கேடு!

எப்படியோ, இந்திப் போராட்டம் மீண்டும் தொடங்கிவிட்டது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் தொண்டர்களுமாக பல்லாயிரக்கணக்கான பேர் இந்தித் திணிப்புச் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தத் தொடங்கியுள்ளார்கள். ஊர்கள் தோறும் நகரங்கள் தோறும் அணியணியாகத் திட்டமிட்டுக் கொண்டு அவர்கள் இந்தித் திணிப்புச்

சட்டப் பிரிவை எரியூட்டிச் சாம்பலாக்கி வருகிறார்கள். போராட்டம் தொடர்ந்து நடந்தவாறு உள்ளது. போராட்டத்தின் இடையில் ஒருநாள் தி. மு. க. தலைவர் கருணாநிதி அவர்களும் இந்தித் திணிப்புச் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்தித் தளைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் இந்தப் போராட்டத்தைப் பலரும் பலவாறு திறனாய்வு செய்கிறார்கள். அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது தவறு என்று சிலர் கண்டித்திருக்கிறார்கள். சிலர், அவர்கள் தீயிடுவது சட்ட நூலன்று; வெறுந் தனித்தாளில் அந்தச் சட்டப் பகுதியை மட்டும் எழுதி அல்லது அச்சிட்டுக் கொளுத்துகிறார்கள் என்று வக்கணை பேசுகிறார்கள். இன்னும் சிலர், அவர்கள் தமிழின் மேல் உள்ள பற்றால் இவ்வாறு செய்யவில்லை; ஆங்கிலத்திற்காகவே இந்தியை எதிர்க்கிறார்கள் என்று கொச்சைப் படுத்துகிறார்கள். வடவாரியப் பார்ப்பனர்களுக்கு வால் பிடிக்கும் தமிழின எட்டப்பர்கள் சிலரோ தி.மு.க. அரசியல் ஊதியம் பெறுவதற்காகவும், தான் இழந்துவிட்ட அரசியல் சாய்காலை மீண்டும் பெறுவதற்காகவுமே, இப்போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறது என்று மனம் வெந்து சாகின்றனர்.

இப்பேச்சுகள் எல்லாம் அவர்களின் வயிற்றெரிச்சலையும், தமிழினம் வளர்ந்துவிடக் கூடாது; வாழ்ந்துவிடக் கூடாது என்னும் இரண்டக எண்ணத்தையுமே காட்டுவனவாகும். எப்பொழுதுமே வடவாரியப் பார்ப்பன வணிகக் கொடியவர்கள் தமிழினத்தை வாழவிட்டதும் இல்லை; சூழ்ச்சியும் வஞ்சகமும் நிறைந்த எண்ணத்தால் கெடுக்காமல் விட்டதும் இல்லை. அவர்களைப் பணத்திற்காகவும் சோறு துணிமணிகளுக்காகவும் தம் வாழ்க்கை நலன்களுக்காகவுமே நத்திப் பிழைக்கும் நம் இன இரண்டகர்களும் காட்டிக் கொடுப்பான்களும் எப்பொழுதும் நமக்குச் சார்பாகவும் அவர்களுக்கு மாறாகவும் பேசியதே இல்லை. எனவே இவையெல்லாம் நாம் எதிர்பார்க்க வேண்டியவையே! எனவே இவை பற்றி நாம் என்றுமே கவலை கொள்ளத் தேவையில்லை. அதுவுமன்றி, இவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதுமில்லை.

ஆனால், இப்போராட்டத்தைச் சாக்காக வைத்து நம் மாநில அரசு, இதில் ஈடுபட்ட பேராசிரியர் அன்பழகனார் உட்பட ஏழு சட்டமன்ற உறுப்பினர்களை நீக்கியதாக அறிவித்துப் பழி தீர்த்துக் கொண்டதே, அதைத்தான் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இக்கொடுமையைச் செய்த பழி சட்டமன்ற அவைத் தலைவரின் மேல் விழுந்தாலும், இவற்றுக்கெல்லாம் மூலவர் நம் முதல்வர் இல்லையென்று யாராவது சொல்லமுடியுமா? அல்லது கருதத்தான் முடியுமா? அவருக்கு என்ன கலைஞர் மேல் அப்படி ஏற்பட்ட பிறவிக் காய்ச்சல்? அவர் ஏன் இதைச் செய்திருக்கவேண்டும்? கலைஞர் எப்படிப்பட்ட தவற்றை

அவருக்குச் செய்திருந்தாலும், இன நலம் கருதி அவர் செய்யும் நல்ல செயலுக்குத் துணை நிற்கவேண்டாம்; இரண்டகம் செய்து காட்டிக் கொடுக்காமல் இருந்தாலே போதும். அவ்வாறு நடந்து கொள்ளாமல் போனால் வரலாறு அவரைப் பழிக்கும்; எதிர்கால இனம் அவரை ஏசும்! இதை அவர் கட்டாயம் நினைவில் இருத்திக் கொள்வது நல்லது. ஏனெனில் இனநலமும் மொழிநலமும் நாட்டு நலமும் ஒருங்கே கருதும் தூய தமிழ் நெஞ்சிலிருந்துவரும் உரைகள் இவை! எனவே முதல்வர்-மாண்புமிகு ம. கோ. இரா. அவர்கள் எண்ணிப் பார்ப்பாராக! இது நிற்க.

இனி, நம் முதல்வருக்குத்தான் பொறுமை மிகுந்தும் சட்டவியல் அறிவு குறைந்தும் காணப்பட்டாலும், சட்டவியல் தெரிந்து வழக்கறிஞராக உள்ள நம் அவைத்தலைவருக்கு அவர் செய்யப்போவது தவறாகப்படவில்லையே, அஃது எப்படி? இந்தியத் தேசிய நலத்தில் அவருக்கென்ன அவ்வளவு அக்கறை? ஈடுபாடு? அவரென்ன வடநாட்டுப் பார்ப்பனியப் பரம்பரையைச் சேர்ந்தவரா? பச்சைத் தமிழர்தாமே! பின் ஏன் தேசியச் சட்டத்தை எரித்தவுடன் அவருக்குச் 'சொரக்'கென்று சீற்றம் வந்துவிட்டது! வடநாட்டுக்காரர் இந்திய அரசியல் சட்டம் என்பதாக ஓர் இரண்டக இந்தித் திணிப்புச் சட்டத்தை எழுதி வைத்துக்கொண்டு, அதனால் என்றென்றைக்கும் இத்தமிழினத்தை அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதைச் சரி என்று ஒப்புக்கொள்கிறாரா, நம் அவைத் தலைவர்? அல்லது தாம் பிறந்த இனம் எக்கேடு கெட்டுப் போனால் நமக்கென்ன, தாம் வாங்குகின்ற அடிமைக் கூலிக்கும் பெற்றுக் கொண்ட இரவல் பதவிக்கும் பிரகலாதனாக நடந்து இராசீவிடமும், தம் ஆண்டை முதல்வரிடமும் நல்ல பிள்ளை என்று பெயரெடுத்துக்கொள்ள விரும்பி விட்டார் போலும்! இல்லையென்றால் இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களையும் அடிமைப் படுத்துகின்ற இந்தி வல்லாண்மைச் சட்டப் பகுதியை எரித்ததற்கே அவர் இவ்வளவு எரிச்சல் அடைவாரா?

இந்தித் திணிப்புச் சட்டத்தை எரிப்பது குற்றம் என்றால், இந்தச் சட்டத்தைத் தம் விருப்பம்போல் எழுதி வைத்துக் கொண்டு, இதுதான் இந்தியக் குடிமக்கள் தாமே விரும்பி ஏற்றுக் கொண்ட சட்டம் என்று சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்களே, அது குற்றம் இல்லையா? யாரைக் கேட்டுக் கொண்டு இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள்? யாரைக் கேட்டு இந்தச் சட்டம் இயற்றப்பட்டது? யாருக்காக அல்லது யாரை அடிமைப் படுத்த இந்தச் சட்டம்? பதினாறு தேசிய மொழிகளும் பல்வேறு தேசிய இனங்களும் உள்ள ஒரு நாட்டில், மக்களை மதிக்காமல், மக்களிடம் ஒப்புதல் பெறாமல், யாரோ பத்துப் பதினைந்து பார்ப்பனக் கங்காணிகளை வைத்துக் கொண்டு, இங்குள்ள அனைத்து இனங்களையும் வருணாசிரமக் கோட்பாட்டுடனும் சாதிமத ஆளுமையுடனும் என்றென்றும் அடிமைப்படுத்தி ஒரினம் ஆண்டு கொண்டிருக்கும் வகையில், சட்டங்களை இயற்றி

வைத்துக் கொண்டால், அது யார் குற்றம்? எனவே, இப்படிப் பட்ட இந்திய அரசியல் அமைப்பியல் சட்டப் பொத்தகமே கொளுத்தப்பட வேண்டிய நிலையில், இந்தித் திணிப்புச் சட்டம் கொளுத்தப்படுவதில் என்ன தவறு இருக்கமுடியும்? இஃதென்ன என்றென்றும் அழியாமல் அப்படியே இருக்கின்ற படி இயற்கையாக, தானே முளைத்தெழுந்த சட்டமா? சட்டத்திற்கு அடங்கி நடக்கவேண்டிய மக்களிடமிருந்து, அந்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு வருகிறதென்றால் அந்த மக்கள் நலம் கருதிச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டியதுதானே அறிவாளர் கடமை! அல்லது அப்படி ஏன் எதிர்ப்பு வருகிறது என்பதைப் பற்றியேனும் சிந்தித்துப் பார்க்க, அல்லது அது பற்றிய கருத்துகளைக் கேட்க விரும்பினார்களா? அவ்வாறில்லாமல் அச்சட்டம் கொளுத்தப்பட்டதற்காக வெட்கமேனும் பட்டார்களா? எரிச்சல் படுவதற்கு மட்டும் இவர்கள் யார்? இவர்களும் மக்களில் ஒரு பிரிவினர்தாமே! ஒரு பிரிவினர்க்கு மட்டும் உவப்பளிக்கக் கூடிய சட்டம் இன்னொரு பிரிவினர்க்கு வெறுப்பைத் தருவானேன்? எரிச்சலை யூட்டுவானேன்? அவ்வாறு எரிச்சல் கொண்டதற்கு அடையாளமாகத்தானே அந்தச் சட்டம் எரியூட்டப்பட்டது?

நாட்டின் ஒரு பகுதியில் அந்த நாட்டிற்கு அச்சாணியாக அமைக்கப் பெற்ற சட்டம் கொளுத்தப் படுகிறதென்றால், முறைப்படி அச்செய்தி, அச்சட்டத்தை வைத்து ஆண்டு கொண்டிருப்பவர்களுக்கன்றோ முதலில் எடுத்துரைக்கப்பட வேண்டும்? இதுவன்றோ ஒரு மாநில அரசின் கடமையாக இருக்க வேண்டும்! அதை விட்டுவிட்டு, சட்டத்தை எரித்தவர்களை-அதுவும் சட்டமன்ற உறுப்பினர்களாகவே அவர்கள் இருப்பதால், எவ்வாறு சிறைப்படுத்த முடியும்? சட்டத்திற்குக் காப்பாக இருக்க வேண்டியவர்களே, அவ்வாறு உறுதிமொழி எடுத்தவர்களே, அச்சட்டத்தைக் கொளுத்துகிறார்களென்றால், அஃது அச்சட்டத்திலன்றோ ஓட்டை இருக்கிறது அல்லது அது நடுநிலையாகவும் நேர்மையாகவும் இல்லை என்பதன்றோ பொருளாக இருக்க முடியும்? இதை விளங்கிக் கொண்டு முறைப்படி நிலைமையை மேலிடத்து ஆளுமைக்கு அறிவிப்பதன்றோ ஒரு சட்டமன்ற அவைத் தலைவரின் பொறுப்பாக இருக்க முடியும். அதைப்பற்றி ஒன்றுமே கவலைப்பட்டுக் கொள்ளாமல், சட்டம் எரிகிறதே என்று கவலைப்படுகிறார் ஓர் அவைத்தலைவர் என்று சொன்னால், அவர் மக்களைப் பற்றியே கவலைப்படவில்லை என்றுதானே பொருள் பண்ணிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியானால் மக்களுக்காகச் சட்டமா? சட்டத்திற்காக மக்களா? இதற்கு அவைத்தலைவர் கூறும் விடை என்ன?

நம்மைப் பொறுத்தவரையில், இந்திய அரசியல் அமைப்பியல் சட்டப் பொத்தகமே கொளுத்தப்பட வேண்டிய ஒன்றாக, உறுதியாகக் கருதுகிறோம். இதன் அனைத்து உறுப்புகளும், இப்பொழுது மேலாளுமையிலுள்ள ஓர் இனத்தை மட்டுமே வாழ

வைக்கக் கூடியவையே! வெளிப்படையாகச் சொல்வதானால் இது ஆரியரின் நன்மைக்காக, ஆரியரால், வருணாசிரம (அ)தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவே,எழுதிவைத்துக் கொள் ளப்பெற்ற சட்டமாகும். இதை முழுமையாக எரித்துவிட்டு, இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் அவற்றின் அனைத்து நலன்களுக்கும் ஏற்ற வகையில் ஒரு புது அமைப்பியல் சட்டத்தையே, மக்கள் கருத்தறிந்து இயற்றிக் கொள்ளுதல் வேண்டும்!

நிலை இவ்வாறிருக்க, இப்படிப்பட்ட சட்டத்தில், பச்சைச்சாணி மேல் பவ்வீ விழுந்ததுபோல, விழுந்து கிடக்கும் இந்திச் சட்டத்தை எரித்ததில் இத் தென்திசைப் பாண்டியனுக்கு எந்த உறுப்பு கோணையாகப் போய்விட்டது? அல்லது எதில் எரிச்சல் கண்டு விட்டது, இவர் நீதிமன்ற நடுவரைப்போல், இதை எரித்த சட்ட மன்ற உறுப்பினர்கள் யாவரையும் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக, அனைவரையும் வெளியேற்றுவதற்கு? இஃது இவரின் அப்பழுக்கற்ற ஆரிய அடிமைத்தனத்தையன்றோ வெளிப் படுத்திவிட்டது!

சட்டமன்ற அவைத்தலைவர், சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு மட்டுமே தலைவர். அவர் அறமன்றத்தின் நடுவர் அல்லர். சட்ட எரிப்பு நடவடிக்கை சட்டமன்றத்திற்குள் நடைபெற்றிருந்தால் மட்டுமே அவர் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அது சட்ட மன்றத் திற்கு வெளியிலன்றோ நடந்திருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், அம்மன்றத்திற்கு வெளியே, குற்றவியல் சட்டப்படி ஒரு குற்றம் புரிவதாக வைத்துக் கொண்டால், அதைக் கவனித்துக் கொள்ள காவல்துறை இருக்கிறது. தண்டனை கொடுக்க அற மன்றம் இருக்கிறது; இவர் கை எதற்கு ஊரெல்லாம் நீளவேண்டும்? சட்டம் எரித்தவர்களைப் பிடித்த காவலர்கள் அவர்களைத் தளைப் படுத்தி, இவர் முன்னிலையிலா கொண்டுவந்து நிறுத்தினார்கள்; இவர் அதுபற்றித் தீர்மானிப்பதற்கு? அப்படி அவர்கள் கொண்டு வராததாலேயே, இவர் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை என்று தெரியவில்லையா? இப்ப டிக் கருதுவதற்குச் சட்ட அறிவுகூடத் தேவையில்லையே! பொது அறிவே போதுமே!

அவைத்தலைவர் சட்டமன்றக் காவலரைப் போன்றவரே! காவலர்களுக்கே தளைப்படுத்தும் அதிகாரம் தவிர தண்டனை கொடுக் கும் அதிகாரம் இல்லையே! பின் ஏன் இவர் அறமன்ற நடுவரைப் போல நடந்து கொண்டிருக்கிறார்? முன்னரே, அவர் இதுபோலும் ஒருவர் வழக்கில் அவர்க்குத் தண்டனை கொடுத்த பொழுது, நிறையக் கண்டனங்களைப் பெற்றுக் கொண்டதும், பின், இவர் தண்டனையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மூக்கில் காயம்

பட்டதும் இவர்க்கு நன்கு நினைவிருக்குமே! பின்னும் ஏன் இவர் அதிகார மூப்புடன் நடந்து கொள்ள வேண்டும்? அதுதான் அதிகாரச் செருக்கு என்பது!

அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள், கூர்மையான கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு இருப்பவர்களைப்போல அமைவுடனும் (நிதானத்துடனும்), பொறுமையுடனும், பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்வார்கள், இவரோ தலைக்கிறுக்குடனன்றோ நடந்து கொண்டிருக்கிறார்! இவருக்கென்ன பதவிக்கிறுக்குப் பிடித்திருக்குமோ? அவருக்கே அது வெளிச்சம்!

இனி, இந்தித் திணிப்பைப் பற்றி, வல்லதிகார வம்படி வழக்கில், இடையில் நின்று எத்தர்கள் சிலர் தமிழினத்திற்கு ஏடாகூடமாய் நடந்து, தங்களின் ஆண்டான் அடிமைத் தனத்தை நன்றாய் வெளிச்சம் போட்டுக் காட்டி வருகிறார்கள். இவர்களுக்கு மிக அண்மையில் வரப்போகும் வடவர் வல்லதிகாரப் போராட்டங்கள் நல்ல பாடங்களை உணர்த்தும். அதுவரை இந்தியெதிர்ப்புப் போராட்ட மறவர்கள் தமிழுக்காகச் செய்யும் தங்கள் தங்கள் கடமைகளில் ஓர் இம்மியும் நெகிழ்ச்சி காட்டாமல், தங்கள் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழினப் பகைவர்கள், இரண்டகர்கள், காட்டிக் கொடுப்பான்கள் பிரகலாதன், வீடணன் என்னும் பெயர்களில் மட்டும் இருப்பார்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அவர்கள் பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் பெயர்களிலும் இருப்பார்கள் என்பதையும் தமிழின நலக் காவலர்களும் தொண்டர்களும் கருதிக் கொள்வார்களாக. எனவே, நம் பகைவர்கள் எதிரிகளின் பாசறைகளில் மட்டும் இரார்; நம் பாசறைக்குள்ளும் இருப்பார்கள். அவரவர்களை அவரவர்களின் இதுபோன்ற செயல்களால்தாம், நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அன்பர்கள் சிந்தித்து உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். -பெருஞ்சித்திரனார்.

நினைவிருக்கட்டும்!

உ. த. மு. க. நடத்தும்

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

'86 திசம்பர் 27,28-ஆம் பக்கல்களில்

சென்னை, பெரியார் திடலில் நடைபெறும்!

இருநாள்களிலும் கருத்தரங்கு காலை 9 மணியளவில் தொடங்கும். அனைவரும் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் தவறாமல் வருக!

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது போல் நாமும் போய் அடுத்த முறை கூடும்பொழுது முழுமை யான ஒட்டுறவுக்கான நிலையில் கூடுவோம்' என்றார்.

-இவ்வகையில் இக்கூட்டத்திற்கு ஆன மொத்தச் செலவு ஏறத்தாழ ஐம்பது கோடி மக்கள் பணம்!

-இத்தொகை, தமிழக மக்களின் வரிப் பணத்தையும் பாழடிக்கிற திட்டம்! இத்திட்டம் எதற்காக என்றுபார்த்தீர்களா?

-முழுமையாக,

0 அதிகார வெறிபிடித்த இராசீவ் தம்மைப் பல நாடுகளுக்கும் தலைவராக்கிக் கொள்ள வேண்டும் என்பதும்,

0 ஈழப்போராளிகளை எப்படியாவது திறமையாகத் தமிழீழத் திற்கு அனுப்பிவிட வேண்டும்-என்பதும், அதன் வழித் தமிழீழப் பிரிவினையை முழுமையாக மழுங்கடித்துவிட்டு, இலங்கையை ஒரே நாடாக வைத்துச் சுரண்டுவது- என்பதும்,

0 இந்தியாவில் உள்ள தேசிய இன எழுச்சிகளை ஒடுக்கி, இந்திய ஒற்றுமையைக் கட்டிக் காப்பதும்,

0 அனைத்துப் பண்பாடுகளையும், கலைகளையும் அழித்து, அல்லது தன்னுள் கரைத்துக் கொண்டு, ஆரியக் கலையை நிலைநிறுத்து வது என்பதும்,

0 ஆரிய வரலாற்றுக் கல்வியையே ஆசியா முழுவதும் பரப்பு தல் வேண்டும்-என்பதும்,

0 இன்றைக்கும் அன்றைக்கும் ஆரியத்திற்குச் சிறிதும் உடன் உறவு இல்லாத தமிழகத்தை அடிமை நிலையிலேயே வைத் திருந்து படிப்படியாக அழித்தல் வேண்டும் என்பதும், தவிர வேறு என்னவாக இருந்துவிட முடியும்?

-எனவே தமிழக மக்களை எச்சரிக்கையாகச் சிந்தித்து எதிர்ச் செயல் செய்ய எண்ணுதல் வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறோம். 0

இந்தியத் தேசியமும் திராவிடத் தேசியமும்

0 இந்தியத் தேசியமும் மாயை! திராவிடத் தேசியமும் மாயை! தமிழ்த் தேசியந்தான் மெய்யானது! எனவே தமிழக இளை ஞர்கள் இந்திய திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆயிரக்கணக்கான வரலாற்றுச் சான்றுகளுடன் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்குகிறார் இதன் ஆசிரியர்-

பேரறிஞர் குணா.

420 பக்கங்கள் விலை உருபா 25. சலுகைவிலை உரு. 20

தாமரை கலை இலக்கிய மன்றம்

16, சபாபதி தெரு, (காமராசர் சாலை குறுக்கு) பெங்களூர்-1

அழுகி வரும் அமெரிக்க நாகரிகம்

"1985 ஆம் ஆண்டில் பத்து இலக்கத்திற்கும் மேற்பட்ட திரு மணம் ஆகாத அமெரிக்க இளம் பெண்கள் 10 முதல் 19 அகவைக்கு உட்பட்டவர்கள் கருப்பம் அடைந்தனர்!"

இது அமெரிக்காவின் அதிகார முழுமையான அறிக்கைகள் வெளிப்படுத்தும் உண்மையாகும்.

இப்படிக் கருப்பம் அடையும் பெண்களில் நூற்றுக்கு 85 பேர் பள்ளிப்படிப்பை நிறுத்திட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். நூற்றுக்கு 70 பேர் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள (Social Welfare Scheme) என்ற குமுகாய நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மடிப்பிச்சை ஏந்துகின்றனர். அமெரிக்க நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கருப்பமுற்ற பெண்களுக்கு அரசின் உதவித்தொகை கிடைக்கும்.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் பெண்களில் 65 விழுக்காட்டினர் படிப்பை முடிப்பதற்கு முன்பே உடலுறவுச் செய்திகளில் கைதேர்ந்தவர்களாகி விடுகின்றனர்.

குழந்தைகளைக் கொண்ட ஒவ்வொரு நான்கு குடும்பத்திற்கும் ஒரு குடும்பம் தந்தையின்றித் தாயின் பராமரிப்பில் மட்டும் வாழும் குடும்பமாக இருக்கின்றது. 1990-இல் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வியக்கத்தக்க அளவில் இன்றைய அமெரிக்கத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் கற்பைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. திருமணத்தின் போது அல்லது அதற்கு முன்பு தங்கள் குழந்தைகள் கன்னித்தன்மையைக்- கற்பைக்- காப்பாற்றுகின்றனரா என்பதைப் பற்றி எந்தத் தாயும் கவலைப்படுவதில்லை.

"உங்களுடைய மகள் திருமணம் ஆகும் வரை கற்புடையவளாக இருந்திட வேண்டியது இன்றியமையாதது என நீங்கள் கருதுகின்றீர்களா?"

இப்படியொரு வினா அமெரிக்கத் தாய்மார்களிடம் கேட்கப்பட்ட போது, பெரும்பாலான தாய்மார்கள் ***"திருமணமாகும்வரை என் து மகள் கற்புடையவளாக இருந்திட வேண்டிய தேவையில்லை"*** என்றே விடை சொல்லி இருக்கின்றார்கள்.

-இதுவே இன்று அமெரிக்காவின் குடும்ப வாழ்வில் போற்றிப் பாதுகாக்கப்படும் 'புனிதத் தன்மை!'

18 அகவை முதல் 25 அகவை வரையுள்ள இளைஞர்கள் பெண்களோடு கூடும் இன்பந்தேடி அலைகின்றனர். அவர்கள் பருக விரும்புவதெல்லாம் 18அகவைக்கு உட்பட்ட கன்னிகளையே! இவ

கள் பெண்களைக் காதலிப்பது காமத்திற்காகத்தான். பெண்களோ காமத்தைக் கொடுத்துக் காதலைப் பெற முயல்கின்றனர்.

இளமையில் இன்பந்தேடி அலையும் இந்தப் பெண்கள் காலத்தில் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் இவர்களைத் திருமணம் செய்து கொள்ள எந்த ஆணும் முன் வருவதில்லை.

1970-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு இரண்டு திருமணங்களிலும் ஒரு திருமணம் மணவிலக்கில் முடிந்தது 1984-ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெளியிடப்பட்ட புள்ளி விளக்கங்களின்படி 25.7 விழுக்காடு குடும்பங்கள் ஒற்றைப் பெற்றோரின் பராமரிப்பில் இயங்கி வருகின்றன. 18 விழுக்காடு குழந்தைகள் தாயின் பராமரிப்பில் மட்டும் வாழ்கின்றன. 1980-ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளில் பாதிப்பேர் (50 விழுக்காடு) தாயின் பராமரிப்பில் மட்டுமே வாழ்கின்றன. 10 அகவையிலிருந்து 19 அகவைவரை உள்ள பெண்களில் கூடாக் காமத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை உலகநாடுகள் எல்லாவற்றையும் விட அமெரிக்காவிலேதான் அதிகம். இது அண்மையில் உலக நாடுகளிடையே நடத்தப் பெற்ற ஒரு கணக்கெடுப்பு வெளிப்படுத்தும் உண்மையாகும்.

திருமணமாவதற்கு முன் உடலுறவில் ஈடுபடுவது என்பது அமெரிக்காவில் பொதுவான செயலாகி விட்டது. இதனை எவரும் தவறு எனக் கருதவில்லை. கூடா ஒழுக்கம், கற்பழிப்பு, சட்ட மாறான உடலுறவு என்ற சொற்கள் இப்போது அமெரிக்காவை விட்டு வெளியேறி விட்டன. அந்த அளவிற்கு இந்த ஒழுக்கக் கேடுகள் குமுகாய ஒப்புதல் பெற்றுவிட்டன.

பெரும்பாலான குழந்தைகளுக்குத் தந்தை யார் என்பதே தெரிவதில்லை. மற்ற நாடுகளைப் போல் அல்லாமல் அமெரிக்காவில் குழந்தைகள் அரசுப் பதிவேடுகளில் பதிய தங்களது தந்தையின் பெயரைச் சொல்லிட வேண்டிய தேவையில்லை. தாயின் பெயரை மட்டும் பதிந்து கொண்டால் போதும். குழந்தைகள் தந்தையைத் தெரியாமலே காலம் முழுவதும் வாழ்கின்றன.

தந்தையைத் தெரியாமல் வாழும் தலைமுறை ஒன்று அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வருகின்றது. இதை நினைத்து வெட்கப்படும் நிலையும் அங்கே இல்லை. இஃதோர் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை மெய்ம்மமாக மாறிவிட்டது இதனைக் காமப்புரட்சி (Sex Revolution) எனப் பெருமையோடு அழைக்கின்றனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் திருமணமாகாத பெண் ஒருத்தி கருப்பம் அடைந்துவிட்டால் பெற்றோர்கள் மனங் குமுறுவார்கள். துயரப்படுவார்கள். வெட்கப்படுவார்கள். குழந்தையை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று பேறுகாலம் வரை மறைத்து

வைப்பார்கள். பேறு முடிந்தவுடன் குழந்தையை செவிலியரிடம் ஒப்படைத்து விடுவார்கள். அப்போது இதில் ஒரு வெட்க உணர்வு இருந்தது.

அண்மையில் திரட்டப்பட்ட புள்ளி விளக்கங்களின்படி 30 விழுக்காடு கருச்சிதைவுக்கு ஆளாகுபவர்கள் 19 அகவைக்கு உட்பட்ட பெண்களே! வசதியான குடும்பங்களில் உள்ள பெண்கள் திருமணத்திற்கு முன்பு உடலுறவு கொள்ளும் போது கருத்தடைக் கருவிகள் எதையும் பயன்படுத்துவது இல்லை. காரணம் கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் கலப்பில் கிடைக்கும் இன்பம் குறைந்து விடுமாம். கருத்தடைக் கருவிகளை விடக் கருச்சிதைவு நல்லது எனக் கருதுகின்றனர் அவர்கள்.

சிறு அகவையிலேயே பெண்கள் கருப்பம் அடைந்து விடுவது தான் இன்று அமெரிக்காவில் தலைகாட்டி இருக்கும் வறுமைக்கான முகாமைக் காரணம். இது அங்குள்ள குமுகவியலாளர்களின் கருத்து. சிறு அகவையிலேயே பெண்கள் கருப்பமடையும் இந்தப் பழக்கம் அங்கே காட்டுத் தீ போல் பரவி வருகின்றது.

காமத்தில் கிடைக்கும் இன்பத்திற்காகவும் சில நேரங்களில் கவலைகளிலிருந்து விடுபடவும் பெண்கள் இந்தக் கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

எப்படி இந்தியாவில் ஏழை மக்கள் வேறு பொழுது போக்கின்றிக் குடிப்பதிலும், காமத்திலும் நலம் கண்டு கணக்கற்ற பிள்ளைகளைப் பெறுகின்றார்களோ, அதேபோல் அமெரிக்காவில் ஏழை கறுப்புப் பெண்கள் தங்களின் கவலைகளிலிருந்து விடுபட காமத்தைக் கடைபிடிக்கின்றனர்.

சின்னஞ்சிறுசுகள்— பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு முன்பே தாய் ஆகிவிடுவதால், செலவினங்களை எதிர்கொள்ளும் அளவிற்கு வருமானமின்றி குமுக நலத்திட்டத்தின் கீழ் அரசிடம் உதவி கேட்கின்றனர். இதனால் அமெரிக்காவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது.

ஒருநாள் நான் என்னுடைய நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக அவர் தங்கி இருந்த விடுதிக்குச் சென்றேன். அங்கே வரவேற்புப் பகுதியில் கறுப்பு நிறத்தைச் சார்ந்த இளம்பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள்.

நான் அவளோடு பேசிக்கொண்டிருந்தபோது அவளது மடியில் குழந்தை ஒன்று பால் குடித்துக் கொண்டிருக்கக் கண்டேன். நான் வியப்போடு அவளைப்பார்த்து, குழந்தையைப் பற்றி உசாவினேன்

"இ'து என் குழந்தை" என்ருள்.

"உங்களுக்குத் திருமணம்"...

"இல்லே. இன்னும் ஆகவில்லே, நான் இந்தக் குழந்தையின் தந்தையை மணந்து கொள்வது பற்றி எண்ணிக்கொண்டிருக்கின்றேன்" என்ருள்.

இ'து அமெரிக்காவில் நான்பெற்ற முதல் வியப்பான பட்டறிவு. இப்படியொரு பட்டறிவு என் மனேவிக்கு ஏற்பட்டது.

"என் மனேவியின் நட்புக்குரிய ஓர் அமெரிக்கப் பெண் என் மனேவியிடம் நீங்கள் தனித்துத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

என் மனேவி "இல்லே, நான் என் கணவர், இரண்டு பிள்ளேகளோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்' என்ருள். இதே கேள்வியை என் மனேவி அந்தப் பெண்ணேத் திரும்பக் கேட்டாள் அதற்கு அவள் "நான் தற்போது என்னுடைய மூன்ருவது கணவனேடு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த இல்லற உறவை நான் இன்னும எத்தனே நாள் தக்கவைக்கப்போகின்றேன் என்றே தெரியவில்லே" என்ருள்.

என் மனேவி பெருமையோடு "நான் முப்பது ஆண்டுகளுக்கு முன் என்னேக் கைபிடித்த கணவனேடுதான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்" என்று சொன்னுள்.

"இந்த இந்தியப் பெண்கள் ஒருபோதும் 'முன்னேறவே' மாட்டார்கள். எப்படி நீங்கள் அந்த ஒரே ஆளோடு இவ்வளவு நீண்ட காலம் காலந்தள்ளுகின்றீர்களோ......" என்று மிகவும் சலித்துக் கொண்டாள்.

அதோடு மட்டுமன்று; அன்று முதல் 'முன்னேருத' என் மனேவியோடு அவள் பேசுவதையும் நிறுத்திக் கொண்டாள்.

எசு. எம். எசு. கோகில்'

நன்றி: 'SURYA', 'சமரசம்' 'தமிழில்: மு. குலாம் முகம்மத்.

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

-(தென்மொழி சுவடி. 9. ஓலே12)

1.	தனியிதழ்	விலே	உரு.	00-65
2.	ஆண்டுக் கட்டணம்	,,	,,	36-00
3.	அரையாண்டுக் கட்டணம்	,	,,	18-00

தொடர்புக்கு : தமிழ்நிலம், 5, அருணுசலத் தெரு, சென்னே-5

'படைமுகமே விடைபகரும்'

•மணிமுத்து, பழனி

வரலாற்றில் வீழ்ந்திட்ட இனங்கள் எல்லாம்
வானோச்சி முன்னேறக் கண்ட போது,
பரலாற்றுப் படைசிலம்பின் சொந்தக் காரன்,
பாழ்பட்டுப் பாழ்பட்டுப் போகின் றானே!
உரையாற்றி உரையாற்றி ஓய்வ தன்றி
ஒன்றுக்கும் உதவாமல் போகின் றானே!
திரைபோட்டுத் திறமைகளை மறைக்கின் றானே!
தீந்தமிழன் உறக்கத்தில் நெளிகின் றானே!

அடிமைநிலை விடியவில்லை; ஆளும் கூட்டம்
ஆணவத்தால் தமிழினத்தை மாய்க்கும் நாட்டம்
முடிவதில்லை; கொடுமைகளும் ஓய வில்லை;
மொழிச்சிக்கல் என்றைக்கும் தீர்வ தில்லை;
படிவதில்லை வல்லாண்மை பணிந்து போனால்!
படைமுகமே இனிவிடையைப் பகர வேண்டும்!
மடிவதில்லை இந்திமொழித் திணிப்பும் இங்கே
மறத்தமிழன் தந்நிலத்தைப் பெற்றால் அன்றி!

ஆண்டாண்டுக் காலங்கள் கடப்ப தல்லால்
ஆனவகை ஒன்றுமில்லை; அவனைக் கெஞ்சி
மாண்டகதை தான்தொடர்ந்து வந்து நிற்கும்;
மாடுகளாய் ஓடுவதே நிலைத்த காட்சி
நீண்டுவரும் கொத்தடிமை ஒழியா திங்கே
நெஞ்சுயர்த்தி உரிமையினைப் பெற்றா லன்றி!
தீண்டவரும் பாம்பின்முன் குனிய லாமோ?
தீயக்கவரும் ஆளுமைக்குப் பணிய லாமோ?

உப்புக்குப் போராட்டம்; புளியை வாங்க
ஒருநாளைப் போராட்டம்; கஞ்சி காய்ச்சும்
செப்புக்குப் போராட்டம்; வேலை கேட்டுச்
செய்வதொரு போராட்டம்; தொழில்வ ளர்ச்சி
மப்புக்குப் போராட்டம்; குடிநீர் வேண்டி
மாதமொரு போராட்டம்; பலன ளிக்கா
ஒப்புக்குப் போராட்டம்; முழுமை யான
உரிமையினைப் போராடிப் பெறுதல் வேண்டும்!

காவிரிக்குக் கையேந்தி நிற்க வேண்டும்;
கல்வியிலே தலையிட்டுக் குழப்பு வோனின்
தாவசையத் தவங்கிடந்து வாட வேண்டும்;
நம்வருவாய் அத்தனையும் அங்கே கொட்டிச்

புதுப்பா

நன்னன்.

நாம் போட்டுக் கொள்ளும் சட்டையின் இருபுறக் கைகளும் ஒரே அளவினவாகவும், ஒரே அமைப்பினவாகவும் தாம் இருக்கின் றன.. சட்டையின் கழுத்துப் பட்டியின் இருபுற முகப்புகளும் ஒரே மாதிரியாகவும், ஒரே வடிவினவாகவுமே இருக்கின்றன. வேட்டி, துண்டு, சேலை போன்றவற்றின் இருபக்க முந்தி (முந்தானை களும் ஒரே மாதிரியாகவும், ஒரே அளவினவாகவும் அமைந்துள்ளன.

தூவலின் எழுது முள்ளின் நுனியின் இருமுனைகளும் ஒரே அளவினவாயிருக்கின்றன. கரிக்கோலை ஒரே சீராக உருட்டிச் சீவி கரியாணியையும் ஒரே சீராக உருட்டித் தீட்டுகின்றோம்.

நம் உடலின் உள்ளும் புறமுமுள்ள உறுப்புகள் ஒன்றுக் கொன்று ஒரே மாதிரியாகவும், ஒரே அளவினதாகவும் இருக்கின் றன. மாந்தர்க்கு மட்டிலுமில்லை, விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன ஆகிய அனைத்துக்குமே இவ்வகைப் பொருத் தங்கள் இருப்பதை எளிதிற் காணலாம்.

இருப்புப் பாதைகள் ஒரே மாதிரியான தண்டவாளங்களைக் (இருப்புப் பாளங்களைக்) கொண்டு இணைகளாகச் செல்லுகின்றன. பலவகைச் சாலைகளும் கூட ஒருபக்கத்துக்கொரு பக்கம் குழியாமலும் விரியாமலும் ஒரே மாதிரியான ஓரங்களைக் கொண்டு செல்கின்றன.

சாலைகளிற் செல்லும் ஊர்திகளின் மேல் நம் பார்வையைத் திருப்புவோம். அவற்றின் ஒருபுற அமைப்புகள் மறுபுற அமைப்பு களை அப்படியே ஒத்துள்ளன. சக்கரங்கள் ஒரே அளவினவாக விருக்கின்றன.

பெட்டியைப் பார்ப்போம். அதன் ஒவ்வொரு பக்கமும் சம மாகவும், ஒரே மாதிரியாகவும் தாம் இருக்கின்றன. புத்தகங்கள்,

(முன் பக்கத் தொடர்ச்சி)

சாவதற்கா பிறப்பெடுத்தோம்? சொந்த வீட்டைச்
சாய்க்கடையாய் மாற்றிடவா உயிர்வளர்த்தோம்?
போவதற்குள் தலையெடுத்துப் பார்க்க வேண்டும்!
போராட்டக் களத்தில்தான் முடிவு தோன்றும்!

திட்டமிட்டே நம்மினத்தை ஒதுக்கி வைக்கும்
திகிடுதத்த வேலைகளைச் செய்வோர் கூட்டம்,
'குட்டுதற்கோ ஆளில்லை' என்று நாளும்
கூத்தடிக்க விடலாமோ? தமிழா,
பட்டறிவில் இன்னும்தான் உறைக்காதோடா?
பைந்தமிழன் உயிர்ப்பண்பை மறந்ததேனோ?
வெட்டொன்று துண்டிரண்டாய் முடிவு தேட
வீரமுடன் களங்காண வந்து சேர்வாய்!

சுவடிகள், இதழ்கள், தாள்கள் ஆகிய யாவுமே ஓர் ஒழுங்கான வடிவத்தைப் பெற்றுள்ளன.

இவ்வாறு எல்லாப் பொருள்களுமே ஓர் ஒழுங்கான வடிவினையும், வரைமுறையினையும் பெற்றுள்ளன. அப்படி அவை பெற்றிருக்கவில்லையானால், நிலைமை என்னவாகும்? சட்டையின் ஒருகை நீளமாகவும் இன்னொருகை குட்டையாகவும் இருந்து, கழுத்துப் பட்டியின் ஒரு காது (நுனி) ஊசியாகவும், மறு காது வளைவாகவும் இருந்தால் எப்படியிருக்கும்? பயித்தியக்காரன் தெருவில் நடப்பது போன்றல்லவா இருக்கும். வேட்டி, துண்டு. சீலை முதலியனவும் வெவ்வேறுபட்ட முந்திகளையுடையனவாயிருந்தால், சொல்லவே வேண்டாம்! மெய்யாலுமே அவற்றை அணிந்திருப்பவர்கள் பயித்தியந்தாம் எனத் துணியத்தோன்றும். தூவலின் முள் முனைகள் ஒரே அளவினதாகவும், கரிக்கோலின் ஆனி முனை ஒரே சீராகவும் இல்லையானால், எழுத்துகள் எழுத்துகளாயிரா. உடலுறுப்புகள் ஒரே அளவினவாகவில்லையானால் மிக இடராகவே முடியும் நடக்கவும், மெல்லவும் பழுவானவற்றைத் தூக்கவும், படுக்கவும், அமரவும் எழவுங் கூடமுடியாமற் போகும். இருப்புப்பாதைகளும் சாலைகளும் மேற்சொன்ன அமைப்புகளைப் பெற்றிருக்கவில்லையானால், சர்ச்சர்ரெனச் செல்லும் ஊர்திகளையும், அவற்றின் ஒய்யாரங்களையும் கண்டுகளிக்க முடியாது. தரை ஊர்திகளும், வானூர்திகளும், கப்பல் முதலியனவும் வரைமுறை மாறியிருந்தால், பயன் பாடற்று வீணாகிவிடும்.

இவ்வாறு எந்த ஒரு பொருளும் அமைப்பில் ஓர் ஒழுங்கையும், அளவையும் உடையதாகி அவற்றின் வழி ஓர் அழகையும் பெறுகிறது. கட்டுப்பாட்டைப் பின்பற்றும் மாந்தரில் ஆண்களாயினுஞ் சரி, பெண்களாயினுஞ் சரி, அவர்கள் கண்ணியத்துக் குரியவராகின்றார்கள். இஃது எளிய மக்களும் புரிந்து வைத்திருக்கும் பொதுவான மிக எளிய உண்மையாகும்.

இவ்வாறான ஒழுங்கும் கட்டுப்பாடும் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றன. இதனின்றும் இலக்கியத்துறைமாறானதாக விருக்க முடியாது. அதிலும் பா யாத்தல் என்பது மாறுபட்டு இருக்கவே முடியாது. பா யாத்தலில் பாவிலக்கணம் கட்டாயம் பின்பற்றப்பெறல் வேண்டும். அவ்வாறில்லையானால், அது பாவாக இருக்காது. கட்டுதிட்டங்களை மீறியவர் பெண்ணாயின் 'ஒழுக்கங்கெட்டவள்' என்றும், 'தப்பிலிச்சிறுக்கி' என்றும் சொல்கின்றோம். ஆணாயின் 'தப்பிலிப்பயல்' என்றும், 'தகவிலன்' என்றும், 'போக்கிலி' என்றும் சொல்கின்றோம். இதே போன்று பாவிலக்கணத்தினின்றும் வழுக்கி - விலகிச் செல்லும் எழுத்துத் தொகுதியை - எழுத்துக் குவியலைப் போய்ப் பாவெனல் தகுமோ? புதுப்பாவெனப் பெயர் சூட்டி விட்டால் மட்டிலும் தப்பிக்க முடியுமா?

பூக்களைக் கொய்து நெருக்கமான கண்ணிகளாய்க் கட்டினால் தான் ஆரம் என்றும், மாலை என்றும் பெயர் பெறும்.

இவ்வாறின்றி நாரைத் துண்டுகளாக்கித் துண்டுக் கொன்றிரண்டு பூக்களைக் கட்டி, அந்நார்த்துண்டுகளைக் குச்சி ஒன்றின் நுனியிற் சேர்த்துக் கட்டி வீசி நடந்தால் எப்படியிருக்கும்? கிறுக்கன் ஒருவன் சொல்கிறான் என்று தான் நல்ல நினைவோடும் அறிவோடு மிருப்பவர் சொல்வர். புதுப்பாவின் உலாவும் இப்படிப்பட்ட தீர்ப்புக்குதான் உள்ளாகிறது.

புதுப்பாக்கள் என்பன அளவிறந்து பிறமொழிச் சொற்களைக் கூசாது எடுத்தாள்கின்றன. ஒன்றின் தலைப்பே 'தத்துவயுத்தம்' என்பதாகும். அடுத்தவன் தேட்டை எடுத்து நமதென்று காட்டு வது சோம்பேறி செய்யும் பகற்கொள்ளையாகும். மயிலைத் தேடிக் காண்பது எளிதன்றெனை நினைத்துக் காக்கையைத் தேசியப் பறவையென்னும் போலியரும், முயற்சி சிறிதுமின்றி அடுத்த வர்களிடம் இரப்பெடுக்கும் இரவலர்களும், தூய நீருக்கும் சாய்கடை நீருக்கும் வேறுபாடு தெரியா மதிமயங்கிகளும் மிகத் தாராளமாய்ப் பிறமொழிச் சொற்களைத் தம் எழுத்துகளில் அள்ளி வீசிப் பிலுக்கி மினுக்கித் திரிகின்றார்கள். தமிழ்ச் சொற்களிருப்பவும் பிறமொழிச் சொற்களை எடுத்தாளல் இழிவு-இழுக்கு-மானக்கேடு என அவர்கள் உணர்வதாகத் தெரிய வில்லை. அவர்கள் தம் எழுத்தைப் பாவென்று கூடச் சொல்வ தில்லை. அதிலும் கடன் வாங்கல், புதுக்கவிதையாம்! புதுக்கவி தன் பெயருக்கேற்ப மிக நன்றாகவே ஆட்டம் போடுகிறது. எழுத் தில் பிற மொழியின் வல்லாண்மையை உவந்து ஏற்பவர்கள், கோயிற் பூசனை மொழி பற்றிய புலனத்தில் மட்டிலும் ஏன் போலி யான ஒரு கருத்தை முன் வைக்கிறார்கள். இவர்கள் எழுதிக் கொள்ளலாம். பார்ப்பனர் மட்டிலும் ஓதக் கூடாதா? சட்டம் அனைத்திற்கும் பொதுவே. ஒரு பேச்சுக்கு இப்படிப் பேசுகின்றார் களோ என ஐயுறவேண்டியுள்ளது. மக்களை ஏமாற்றப் பேசும் பேச்சோ இது வெனவும் கருத இடமுண்டாகின்றது.

சாலடிப்பது போல் முழுவரிகளாகத் தமிழ் முறைப்படி எழுதி னல் நான்கே வரிகட்குள் அடங்கிவிடும் ஒன்றை-ஒரு செய்தியைச் சீன மொழியை எழுதும்முறையில் மேலிருந்து கீழாக ஒன்றைச் சொல்லவும், இருசொற்களாகவும், மூன்றுசொற்களாக வும் நறுக்கிவெட்டிப் பிய்த்துச் சிதைத்துஎழுதிக் காட்டி அதையே புதுப்பாவென்கிறார்கள். நிலவும் விலையேற்றத்திலும், தாள் பஞ்சத்திலும் இது தேவைதானா? இப் புதுப்பாவுக்குத் தமிழைத் தாழ்த்தவும், ஒதுக்கவுங் கங்கணங்கட்டிக் கொண்டுதிரியும் தமிழ்ப் பகைவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தருகின்றார்கள். அவர்கள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்து வீழ்த்துகின்றார்கள். இஃது இந்தத் தோப்புக்காரனாகிய தமிழனுக்கு விளங்க வில்லையே! ஆம் தமிழ்ச் செய்யுட் கட்டுக்கோப்பைத் தகர்த்து அதன்வழித் தமிழ் மொழியை இழிக்கவும், பிறமொழிச் சொற் களைப் புதுப்பாக்கள் உருண்டை உருண்டையாய்அள்ளி மொதுக்கி விழுங்கி ஏப்பமிட்டுத் தமிழ்த்தெருவையே நாறடிப்பதால் தமிழைச் சமற்கிருதக் கலப்புடைய மொழி என்று நிலைநிறுத்

புதுமை வாழ்வு!

கடலூர் மணிமாறன்.

நம்நாட்டில் இந்நாளில் நாளேடு
தாளிகைகள் நடத்துவோரோ
தம்மடியை நிரப்புவதில் குறியானார்;
பாலுணர்வைத் தாறுமாறாய்
நம்பாத வகையுரைத்து நாணிழந்தார்;
நல்லறத்தை ஒதுக்கி வைத்தே
அம்மணத்துக் காட்சிகளை அருவருப்பை
விதைக்கின்றார்! அறிவைத் தேய்த்தார்!

திரையுலக வம்பளப்பைத் தில்லுமுல்லுத்
தடித்தனத்தைத் திரித்துக் கூறி
உரைக்கவொணாப் பழிசேர்த்தார்! உழைப்பாளர்
நிலையுயர்த்தும் உணர்விழந்தே
அரசினரின் விளம்பரத்துக்(கு) அங்காந்து
கிடக்கின்றார்! அடிமையானார்!
வரம்பின்றிப் பிறசொல்லைத் தமிழ் வயலில்
நடுகின்ற பிழைசெய்கின்றார்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தவும் முடியும் என எண்ணியே தமிழ்ப் பகைவர்கள் இவற்றை அரவணைக்கின்றனர்.

பாடல் எழுத விழையும் தோழர்களே, பாட்டை அதற்கான முறையைப் பின்பற்றி எழுதுங்கள். இல்லையானால், உங்களை வருங்காலத் தமிழுலகு இரண்டகர் பட்டியலிற் சேர்த்துவிடும்; ஒரு நாளைக் குறித்தொதுக்கி வைத்துக் கொண்டு உங்களின் கொடும் பாவைகளை (கொடும்பாவியன்று) த் தெருத் தெருவாக இழுத்துச் சென்று முச்சந்தியிற் போட்டுச் சுட்டெரித்து எச்சரிக்கை நாளாகக் கடைபிடிக்கும். இப்படிப்பட்ட வரலாறுதான் வேண்டுமா? எண்ணிப் பாருங்கள். தமிழ்மொழியின் உணர்வுள்ளவர்களென்று தம்மை எண்ணிக் கொள்ளும் பிறர்க்குச் சொல்லிக் கொள்ளும் எழுத்தாளத் தோழர்களே, கொஞ்சம் நில்லுங்கள். பாவேந்தன் தன் மரபினர் என்று உரிமை கொண்டாடும் பாதை மாறிய தோழர்களே, எண்ணிப்பாருங்கள். நம் தாய்மொழியாம் தங்கத் தமிழ் மொழிக்கு ஆக்கஞ் சேர்க்கவில்லையானாலும் இழுக்கைச் சொத்தாகத் திரட்டி வைக்கத் துணை போகாதீர்கள்; எந்த வகையிலும் உருவிலும் தெரிந்தோ தெரியாமலோ வடமொழிக்கு வால் பிடிக்காதீர்கள்; தென்மொழிக்கு உரியவர்கள் தாம் நீங்கள் என வெளியரங்கமாய் வெளியே வாருங்கள்.

துணிவாகக் கொடுமைகளை எதிர்க்கின்ற
தொண்டுள்ளம் இல்லா ராகி
அணியாகும் நற்கருத்தை அழகொளிர
விரித்துரைக்கும் மனமி ழந்தே
வணிகத்தின் படிநிற்பார்! வாய்மையதன்
குரல்வளையை நெறித்துச் சாய்த்துப்
பிணியாகி எவருக்கும் பயன்படாப்
பேதைமையைப் பெருக விட்டார்!

இரும்புள்ளம் வாய்ந்தவராய் இழிதகைமைப்
போக்குகளை எதிர்க்கும் ஆண்மை
ஒருசிறிதும் இல்லாராய் ஒன்றுமிலாப்
பேடியரோ உவக்கும் வண்ணம்
கரும்பனைய மொழிபுகன்று கால்வருடிக்
கிடக்கின்றார்! காவல் நாயாய்!
வருங்காலம் பயனுறவே இனியேனும்
வகைதெரிந்து பணிசெய் வாரா?

மென்றதையே மறுபடியும் மெல்வதுபோல்
மேன்மையிலாக் கருத்தைக் கூறின்
என்னாகும் இளைஞர்களின் எதிர்காலம்?
எப்பயனும் சிறிதும் நேரா!
தன்மானக் காப்புக்குத் தாளிகைகள்
பணியாற்றத் தவறு மாயின்
நின்றிடுமோ தமிழுணர்வு? நிலைத்திடுமோ
புகழ்வாழ்வு? நினைந்து பார்ப்பீர்?

நன்றியறிவிப்பு!

பொறுப்பாசிரியர் மேல் உண்மை அன்பும் அவரது உடல் நலத்தில் மிகுந்த அக்கறையும் அவரது தொண்டில் மிக ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட நெடுநாளைய தென்மொழி அன்பரும், புரவலரும் ஆகிய, கரூர் குழந்தை மருத்துவர் சி. இராமச் சந்திரனார் அவர்கள் அண்மையில் ஆசிரியர் அவர்களின் உடல் நலக் குறைவு நிலையைக் கேள்விப்பட்டு, அவர்களுக்கு உரு 200-மதிப்புள்ள ஒலியன் (Tonic) புட்டில்கள் அனுப்பியுள்ளார். அவர் அருள் உள்ளத்திற்குத் தென்மொழி தன் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. — அமைச்சர்

0 தென்மொழி, தமிழ்நிலம் ஆசிரியர் தமிழ்நாட்டுப் பிரிவினை உணர்வைத் தூண்டுகிறார்!

0 அவரின் எழுத்துகள் வன்முறையைத் தூண்டுவனவாக இருக்கின்றன!

0 அவர் எழுத்துகளை ஆராய்ந்த நடுவணரசின் உசாவல் குழு, அவரைக் கடுமையாகக் கண்டிக்கிறது!

0 அக்குழுவின் முடிவை, நடுவணரசின் செய்தித்தாள் கழகமும் ஏற்றுக் கொள்கிறதாக, அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது!

0 நடுவணரசின் கண்டன அறிக்கை!

நடுவணரசின் செய்தித்தாள் கழகத்தின் (Press Council of India) சார்பில், தென்மொழி, தமிழ் நிலம் இதழ்களின் ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் மேல் சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை ஆய்வதற்காகக் கடந்த அக்டோபர் 28-இல் ஐதராபாத்தில் ஓர் ஆய்வுக் குழு அமைக்கப் பெற்றிருந்தது.

அக்குழு, தன் ஆய்வு அறிக்கையையும் இறுதியான தீர்ப்பு முடிவையும் அரசுக்குக் கொடுத்திருந்தது. அதனடிப்படையில் செய்தித்தாள் கழகம், நவம்பர் 10-ஆம் பக்கல் அத்தீர்ப்பு அறிக்கையை ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பித் தன் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. அவ்வறிக்கையின் ஆங்கில வாசகத்தையும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் கீழே தருகிறோம்.

எத்தகைய சூழ்நிலையிலும், எதற்கும் அஞ்சாமல் அரசு நடவடிக்கைக்குக் கவலைப் படாமல் - தமிழின முன்னேற்ற முயற்சிகளை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அன்பர்கள் தெளிவாக, இவ்வறிக்கையினின்று விளங்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்தச் சூழ்நிலையில், நம் இயல்பான முயற்சிகளுக்காக அரசு எந்த அளவு தண்டனை கொடுத்தாலும் நாம் மனமுவந்து ஏற்றுக் கொள்ள அணியமாகவே இக் கடுமையான, அஞ்சத்தக்க நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறோம். அப்போக்கில் இன்று போல் என்றுமே உறுதியுடன் இருப்போம் என்பதை அன்பர்களுக்கும் அதே பொழுது அரசுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி, ஐதராபாத்தில் நடந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை வருமாறு:—

Decision of the Press Council of India in the Complaint of the Ministry of Information and Broadcasting against 'Thenmozhi', Tamil Monthly and 'Tamil-Nilam', Tamil Weekly rendered on October 28, 1986 at Hyderabad.

In a communication dated January 17, 1986 Ministry of Information and Broadcasting stated that an editorial in the July-August 1985 issue of 'Thenmozhi', a Tamil Monthly and writing dated July 28, 1985 in the issue of 'Tamil Nilam', a Tamil Weekly might give rise to secessionist tendencies among the readers. The first writing criticised Mr. Rajiv Gandhi for his inability to help Sri Lanka Tamils who had been victimised by the Sri Lanka Government and its Security Forces. In the second soiting it was stated that final solution to the development of the Tamil race was a free and sovereign Tamil Government. It also called upon the Tamil leaders to establish Tamil Nadu as a separate state.

As the matter was considered to be serious,show cause notices were issued to the editors of both the newspapers. In a consolidated written statement, it was submitted that those magazines were published with a view to educate the Tamilians and to make them understand the ancient history and evolution of Tamilians as also to protect them from the invasion by foreigners and their 'aids', According to them, since Tamil Language literature and culture was being ruined by foreigners, it become their duty to protect. them. They stated that they had no malafide intention to hurt the sentiment of non-Tamilians.

This matter was considered by the Inquiry Committee of the Council at its meeting held on September 18, 1986 at New Delhi.

None appeared either on behalf of the complainant or the respondent.

Upon perusing the material on record,' the committee was satisfied that the impugned writings were in clear violation of all journalistic norms and ethics, if not of the Laws of the land. They are provocative and dangerous

as they preached secession. The Committee decided to censure the editors.

The Council decided accordingly.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு:

தமிழ் மாத இதழ் 'தென்மொழி', தமிழ்க்கிழமை இதழ் "தமிழ் நிலம்" ஆகியவற்றின் மேல் அரசின் தகவல் மற்றும் செய்தி பரப்புத்துறை அமைச்சகம் கூறிய குற்றச்சாட்டுகளின்படி, நடுவணரசின் செய்தித்தாள் கழகம் '1986', அக்டோபர் 28-இல் ஐதராபாத்தில் எடுத்த தீர்மான முடிவு.

கடந்த 1986, சனவரி 17-இல், அரசின் தகவல் மற்றும் செய்திபரப்புத்துறை அமைச்சகம், தமிழ் மாத இதழான **தென்மொழி** தன் சூலை - ஆகத்து 1985 வெளியீட்டிலும், தமிழ்க்கிழமை இதழான **தமிழ்நிலம்** தன் 1985 சூலை 28 வெளியீட்டிலும், அவற்றின் வாசகர்களிடையில் பிரிவினை நோக்கத்தைத் தம் ஆசிரியவுரைகளில் வெளிப்படுத்தியிருந்தன என்று,ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அவற்றுள், முதல் வெளியீட்டில் இலங்கை அரசாலும், அதன் பாதுகாப்புப் படைகளாலும் கொடுமைப் பட்டுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத திரு. இராசீவ் காந்தியின் நடவடிக்கையைத் திறனாய்வு செய்திருக்கிறது. இரண்டாம் வெளியீட்டில், தமிழின முன்னேற்றத்திற்கு முடிவான தீர்வு இறைமை பெற்ற தமிழ்நாட்டு அரசை அமைப்பதே என்று கூறப் பெற்றிருக்கிறது. அத்துடன் தமிழகத் தலைவர்களைத் தனித்தமிழ் நாட்டைத் தனியரசாக உறுதி செய்ய அறைகூவி அழைக்கிறது. இச் செய்தி கடுமையானது என்று கருதப்பட்டதால், அவ் விதழ்களின் ஆசிரியர் மேல் அது தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அறிக்கை கொடுக்கப்பட்டது.

அதற்கு, ஒரு முழுத்தொகுப்பான எழுத்துரை விடையாகக் கொடுக்கப்பட்டதில், அவ்விதழ்கள் தமிழர்களுக்கு தம் முந்தைய வரலாற்றை அறிவிக்கும் நோக்கத்துடனும், அவர்களின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைப் பிறவினத் தாக்குதல்களிலிருந்து காக்கும் எண்ணத்துடனும் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் கருத்துடனும் அவை எழுதப் பெற்றனவாகக் கூறப்பட்டது. அத்துடன் அவர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவை, பிறவினத்தவரால் அழிக்கப் படுவதாகவும், அவற்றைக் காப்பது தங்கள் கடமை என்றும் கூறப்பெற்றது. மற்றபடி, தமிழரல்லாத பிற இனத்தவரின் உணர்வுகளை ஊறுபடுத்துவது தங்கள் நோக்கமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

யெண்ணி வியந்து, நெஞ்சம் நிறை நன்றி கூறுகிறேன். வணக்கம்.

- வெ. கொ. கன்னியப்பன், அம்பர்நாத்.

0:1185: அய்யா அவர்கட்கு வணக்கம்! தென்மொழி, சுவடி 22. ஓலை 11 (அக்-நவ 1986) இன்று கிடைக்கப்பெற்று மட்டிலா மகிழ்ச்சி அடைந்தேன். இருப்பினும் "பெருஞ் சித்திரனார் விடையளிக்கிறார்" கேள்வி 15 பார்த்து ஆழ்ந்த துயரமும் வெட்கமும் அடைந்தேன். இப்பொழுதெல்லாம் மெத்தப் படித்தவர்கள்தாம் கோயபல்சு வேலைகளில் இறங்கி யுள்ளனர். அரசியலில்தான் எதை எதையோ செய்கிறார்கள் என்றால் பொது வாழ்விலும் தரம்தாழ்ந்து போகிறார்கள்! அ'து ஏன் என்று நமக்கே விளங்கவில்லை! ஒரு பொதுநலத்தொண்டர், பகுத்தறிவாளர்க்கு இ'தெல்லாம் இருக்கக் கூடாது. ஆனால் எங்கே தமக்குக் கிடைக்கிற அருமை பெருமைகளையெல்லாம் தட்டிச் சென்று விடுவார்களோ என்ற காழ்ப்புணர்ச்சி! மொழி-இன-நாட்டு நலத்தில் தன்னலம் பாராத கடினமான உழைப்பு-அதன் ஊதியம்தான். படித்தோர் விரும்புவது தென்மொழியையும் அதன் மாசற்ற தொண்டையும்! மொழி-இன-நாட்டு விடுதலைப் பணியில் யார் அதிகமாக - கடினமாக உழைத்தவர் என்று காண்பிக்கவேண்டுமே தவிர, இதுபோன்று அன்று என்பது, மலேசியா சென்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி வந்த கருஞ்சிறுத்தைக்குத் தெரியுமே! பின்பு ஏனிந்த வீண்வேலை! பொய்யுரை! போலிநாடகம்! இன்னும் அடிக்கிற கொள்ளையில் குறுக்கிட்டால், ஆளையே தீர்த்து விடுவார்கள்போல் இருக்கிறது! எனவே 'பொய்ப் பரப்பலை'ப் பொய்யால்தான் முறியடிக்க முடியும்! அவ்வாறு மாசுபடச் சொன்ன இவர் உயர்ந்தவரா?

- உலக முதல்வன், க. மு, திருவண்ணாமலை.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

இச்செய்தி, 1986 செப்டம்பர் 18-இல் புதுத்தில்லியில் மேற்படி கழகத்தின் உசாவல் குழுவில் கருத்தாய்வு செய்யப்பட்டது.

அக்குழுவின் உசாவலுக்கு முறை யீட்டாளரோ குற்றஞ் சாட்டப்பட்டவரோ நேரில் வரவில்லை.

எனவே, பதிவில் இருந்த செய்திகளை மட்டும் நன்கு ஆய்ந்து பார்த்ததில், அவ்வாய்வுக் குழு, குற்றஞ்சாட்டப்பெற்ற அக்கருத்துரைகள், எல்லா வகையான செய்தியிதழ் நெறிமுறைகளை யும் வரைமுறைகளையும் அல்லது இந்நாட்டுச் சட்டமுறைகளையும் வலித்தமாக மீறுவனவாக முழு மனத்துடன் முடிவு செய்தது. அவை நாட்டுப் பிரிவினைக் கருத்துகளைப் பரப்பத் தூண்டுவனவாகவும், நாட்டு ஒற்றுமைக்கு ஏதம் விளைவிப்பனவாகவும் உள்ளன என்று ஆய்வுக்குழு தீர்மானித்து, அவ்விதழாசிரியரைக் கண்டித்தது.

செய்தியிதழ்க் கழகமும் அவ்வாறே முடிவு செய்கிறது. 0

0: 1186: அன்பு ஐயா அவர்களுக்கு, கணியன் வரைவது, வணக்கம். குடும்பம், நண்பர்களுடன் நலம். தங்களையும் தமிழையும் நலம் சூழட்டும்.

நாட்டில் நிலைமைகளைக் காணும் போது, நம்மால் பேசாமல் இருக்க முடியவில்லை. மக்கள் வெளிப்படையாகவே வஞ்சிக்கப்படுகிறார்கள். அரசியல் கயவர்கள் ஒருபுறம்; திரைப்படக் காமுகர்கள் மறுபுறம்; ஆ(பசு)வின் தோல் போர்த்திய மதப்பேயர்கள் (மதவாதிகள்) இன்னொரு புறம்; இராப்பகல் என்று பாராமல் எளிமையான ஏழைப் பொதுமாந்தரின் (மன, மெய்) உழைப்பை அட்டையாய் உறிஞ்சும் கொடுங் கொடிய முதலாளியர்கள் வேறொரு புறம். இந்நால்வகை இழிதகை மாக்களால் **இனம், மொழி,** நாடு இம்மூன்றும் படும் பாடுகள், இழந்த இழப்புகள், எண்ணி மாளா. 'எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை ஊதியம்' என்பதுபோல், நாடு பற்றி எரிவதாகக் கொள்ளை அடிக்கிறார்கள் அந் நால்வகை நரிகள் கூட்டத்தார்.

இவற்றிற்கு விடிவே இல்லையா? அல்லது, நாமும் இப்படியே இருந்து மடிவதா?

ஐயா! தாங்கள் இப்பொழுது எழுதுவதெல்லாம்-குறிப்பாக இல்லை. இந்தி மொழி என்றுமிலாத வலுவுடன் திணிக்கப்படுகின்றது. இங்கிருக்கின்ற இளித்தவாய்த் தமிழன், இந்தியை என்றும் எதிர்ப்போம் என்கின்றான். அஃதாவது முடிவே இல்லாத வெற்று எதிர்ப்பு? எந்த அரசியலாளனுக்காவது சூடு, சுரணை, மானம் இருக்குமானால் 'இராசீவ் இடம், உன் இந்தியும் வேண்டா, உன் இந்தியாவும் வேண்டா' என்று கூறட்டுமே! தமிழ் நாட்டு அரசியல்காரர்கள் தொடை நடுங்கிகள்; கூவாத கோழைகள்! 'இந்தியை என்றும் எதிர்ப்போம் என்பது தமிழர்கள் என்றும் அடிமைகளாய் இருப்போம்' என்பதாகும்! இவ் வடிமைச்சிறை உடைத்தெறியப்பட வேண்டிய ஒன்று. அன்பன்,
- கணியன், புதுச்சேரி.

0:1187: பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய எங்கள் பாசமிகு அன்பு அய்யா அவர்களுக்கு, நேரினில் உங்களைச் சந்திக்க இயலாவிட்டாலும் - "தென்மொழி" "தமிழ்நிலம்" இதழ்கள் வாயிலாக உங்கள் கட்டளைகளையும் உங்கள் கருத்துகளையும் பெறுகிறேன். அதன் வாயிலாக எதிர்காலத் தமிழ் நிலம் மீட்புப் பணிகளுக்கு, திட்டங்களுக்கு என்னை அணியப் படுத்திக் கொள்ள என்னை நிலைப்படுத்திக் கொண்டு வருகிறேன். வருகிற திசம்பர் திங்கள் 27-28 நாள்களில் சென்னை நகரில் தாங்கள் கூட்டவிருக்கும் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு பற்றிய செய்தியினை தமிழ் நிலம் இதழில் படித்து மகிழ்ச்சியுற்றேன். அக்கருத்தரங்கில் உங்களின் தமிழ்நாடு விடுதலைப் பணி உறுதியாக வெற்றி பெறும் என்று நம்புகிறேன். அக் கருத்தரங்கிற்கு என்னால் இயன்ற சிறு உதவியினையும் செய்திட

ஆயத்தமாக உள்ளேன். துமுக்கியால் விளைவுறாத புரட்சிகளை எழுத்துப்புரட்சிகள் விளைவித்துள்ளன. இதனைப் பல நாட்டு வரலாறுகளிலும் காணமுடிகிறது. மாபெரும் தலைவர் ''இலெனின்'' அவர்களின், எழுத்தும், பேச்சுந்தாம் உருசிய முதலாளிய-வல்லாண்மைக்-கொடிய சார் அரசை அழித்துப் புதிய சமநிலை மக்கள் நாயக அரசாகிய சோவியத்து அரசை உருவாக்கிற்று. அதுபோலவே தலைவர் மாவோவின் எழுத்தும் பேச்சுந்தாம் புதிய பொது உடைமைச் சீனு உருவாக உதவின. அதுபோல்,உங்கள் எழுத்துப் புரட்சி, உறுதியாகத் தமிழக விடுதலைக்கு வழிவகுக்கத்தான் போகிறது. புதிய தமிழகத்தில், உங்கள் கொள்கை வழியே, புதிய பொதுவுடைமைக் குடியரசுக் குமுகாயம் மலரத்தான் போகிறது. இன்று தமிழ் நிலத்தில் நீங்கள் விடுதலை விதைகளை விதைத்து அயராது உழைத்து வருகிறீர்கள். இதன் அறுவடையினுல் அடுத்த தமிழ் இளைய தலைமுறையினர் பயன்பெறத்தான் போகிறார்கள். இ'து உறுதி!
அன்புத் தொண்டன், -கரிகாலன், வீரமங்கலம்.

0:1188: பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு வணக்கம்' ''தென்மொழி'' சுவடி-22 ஓலை-9-இல் உரிமைக்காகவும்' இனநலத்திற்காகவும், மொழியின் காப்பைக் கருதியும் வட நாட்டாரின் வல்லாளுமையை ஏற்றிடோம், என்னும் அட்டைப் பக்கப் ''பா'' எதிரடியாயினும் நடுவணரசின் போக்கிற்கு அவை எட்டுமா என்பது வினுதான்.

சிந்தனைத் தெளிவோடு, முறையோடு, காணும் ''பெருஞ் சித்திரனுர் விடையளிக்கிறார்'' என்னும் பக்கம் நீக்கமின்றி நீளுதல் வேண்டும். தங்கள் அன்புள்ள,
- பாவலர் இராவணதாசன் சென்னை-23.

0:1189: தென்மொழி என்ற நல்ல
தீஞ்சுவைத் திங்கள் ஏட்டில்,
மென்மைசேர் தமிழின் மாண்பை,
மதியிலார் அவலந் தன்னை
வன்மையாய்ச் சாடி மக்கள்
வாழ்வுக்கே வழியைக் கூறும்,
பண்புள்ள உங்கள் தொண்டு
பாரெல்லாம் பரவ வேண்டும்!

செய்பயிர் செழித்தி டாமல்
சிறப்பிலாக் களைவளர்ந்தால்,
ஐயகோ உழுது ழைத்தோன்
ஆற்றெணுத் துயர முற்று,
கைகளைப் பிசைந்து மெத்தக்
கதறுவான்! கண்கள் நீரைப்
பெய்திடும்! முதலோ முற்றும்
போனதென் றேங்கிச் சாவான்!

அத்தகு அவலம் போன்றே
ஆனது தமிழர் வாழ்வு!
சித்தத்தைக் கவரும் உங்கள்
செழுமிய கருத்தை நெஞ்சில்
வைத்துமே காத்துக் கொள்வோம்
வையகம் உள்ள மட்டும்;
முத்தென ஒளிரச் செய்து
முன்னோர்கள் நெறியில் நிற்போம்!

- செ. கதிரவன், சென்னை-1

0:1190: அருந்தமிழ்க்கடலே, அன்பின் பெருமழையென அறிஞர்கள் போற்றும் ஐயாவின் பார்வைக்கு. நலம் நலமே விளைக. கடந்த இதழ் தென்மொழி சுவடி 22-ஓலை 9. கிடைக்கப் பெற்றேன். தென்மொழி அன்பர் திரு. க. இளஞ்சேரல் முதுபாண்டியன் அவர்களின் அன்பு மடல் கண்டேன். பார்ப்பனிய இனம் எவ்வாறு தமிழ்மொழியை அக்காலம் தொட்டு அழித்து வருகிறது என்பதை மிகவும் சிறப்பாக எழுதி உள்ளார்கள். இதுபோன்ற மடல் வரவேற்கத்தக்க ஒன்றாகும். அன்றைய 'சரித்திரம்', இன்றைய வரலாறு; 'மந்திரி' கூட பெரும் பாலும் அமைச்சராகி விட்டனர் என எழுதி இருந்தார்கள் ..! தமிழில் பேசுவதை, எழுதுவதைச் சிலர் தவறு எனத் தாழ்வு மனப்பான்மையில் கருதுகின்றனர். பெரும்பாலும் படித்துப் பணியில் உள்ளவர்கள் நம் தூய தமிழ் வளர்ச்சிக்கு உதவினால் படிக்காத மக்களும் உதவுவார்கள்; பயனடைவார்கள் எனத் தென்மொழி வாயிலாக அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன். அன்பின் தம்பி. - மு. இளங்கோவன், இடைக்கட்டு.

0:1191: அன்பு நிறை ஆசிரியர் அவர்களுக்கு எம் தலை தாழ்ந்த வணக்கம்! இந்திப் போராட்டம் பற்றிய தங்கள் ஆசிரியவுரை மந்திரித்தனம் பார்க்கும் மாண்புகளுக்கு இந்தியானா லும் சரி; மந்தியானாலும் சரி, வடக்கு என்ன சொல்கிறதோ, அதே சரி என மடியேந்திப் பதவி நலத்தைச் சொறிந்து கொண்டால் சரியெனத் திரியாமல் இனவுணர்வு கொள்ளச் செய்யட்டும். தமிழின மக்கள் மீது உண்மையான பற்றும், தொண்டுள்ளமும் கொண்ட இயக்கங்கள் ஒன்றோடொன்று கொண்டுள்ள உரசல்களை விடுத்துப் பொதுநலங் கருதி ஒன்றிணைய வேண்டும். அவ்வாறிணைய தலைவர்(?)கள் ஒப்பாவிடினும் தொண்டர்களாவது அவ்வுணர்வு கொண்டிருந்தால்தான் இனி தமிழ்மொழி, இனம் என்னும் கொள்கை வலுப்பெறும். நாட்டு விடுதலை பற்றி மக்களை ஒருமுகப்படுத்தவியலும். இன்றேல், ''சிங்கள வல்லாண்மையை வேரறுப்போம்'' என்று தமிழர்களே சுட்டுக் கொள்வதுபோல் தாம் இங்கும் கத்திக்கொண்டேயிருக்க வேண்டியிருக்கும். தமிழினத் தலைவர்களும், மாண்புகளும் கட்சி, சுவரொட்டி அரசியலை விடுத்து ஒன்றிணைவார்களா? எனும் ஏக்கத்துடன் மடலை முடிக்கிறேன். நன்றி! வணக்கம்,

- அமரர்பூண்டி, க. கதிர்குன்றன், திருச்சி-1.

தெற்காசிய நாடுகளின் கூட்டுறவு அமைப்பு- அரசியல் பின்னணி

(SOUTH ASIAN ASSOCIATION FOR REGIONAL CO-OPERATION (SAARC)- POLITICAL BACK-GROUND.

-விடுதலை வேட்பன்.

மூன்றும் உலக நாடுகள்

வல்லரசு நாடுகளின் தொடர்பு இல்லாமல் இன்றைய அளவில் பல நாடுகளின் கட்டமைப்புகள் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு தேவைகளுக்கு உலகெங்கணும் தொடங்கப் பெற்று நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கான அடிப்படைத் தேவைகள் தங்கள் தங்கள் நாட்டிற்கான பாதுகாப்பு, உருவாக்கப் பொருள், விற்பனை மூலப் பணங்களின் வழிச் சுரண்டல் எனப் பலவகைகளிலும் அமைகின்றன. இதன் அடிப்படையில் வளர்ந்துவிட்ட தலைமைக்கான போராட்டம் வழக்கம்போல் எல்லா நாட்டுத் தலைவர்களிடமும் இருந்தே வந்தது.

இந்நிலையில கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பிற்கு, திருவாட்டி. இந்திராகாந்தி இறந்தபின் அவர் பொறுப்பேற்றிருந்த தலைமைப் பொறுப்பிற்கு இந்தியத் தலைமை அமைச்சர் எனும் வகையில் திரு. இராசிவ்காந்தி பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அப்பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டபோது அதன் பெருமையை அவர் உணர்ந்ததைக் காட்டிலும், கூட்டுச்சேரா நாடுகளின் எட்டாம் மாநாடு சிம்பாவேவ் நாட்டின் தலைநகர் அராரியில் நடக்க இருந்த காலம் நெருங்க நெருங்கத்தான் தம் தலைமைப் பொறுப்பிறகுப் பெருமை குறைந்துவிடப் போகிறதோ எனும் நோக்கில் மிகு விரைவாகச் செயல்படத் தொடங்கினர் இராசிவ். அதுவரை தீர்க்கப் பெருத சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என முண்டியடித்துக் கொண்டு செயல்பட்டார். பஞ்சாப் சிக்கல் தீர்க்கப்பட்டதாகவோ, அசாம் சிக்கல் அடக்கப்பட்டதாகவோ இராசிவ் அறிவித்துக் கொண்டதை உலக நாடுகள் ஏற்க மறுத்துவிட்டன. எனவே இலங்கைச் சிக்கலை எப்படியாகிலும் தீர்த்துவிட வேண்டும் என எண்ணிய இராசிவிற்கு அது சரிவரக் கைகூடாமல் போகவே, நெடுநாள் கிடப்பில் கிடந்த மிசோரம் சிக்கலைத் தீர்த்ததாக வெளியுலகிற்குக் காட்டினர். ஆனல் வெறுமே இந்திய வரைபடத்திலும் இந்தியப் பணத்தைப் பயன்படுத்துகிற உரிமை தவிர்த்து, அனைத்து உரிமைகளும் கொடுக்கப்பெற்ற ஒரு தனி நாடாகவேதான் மிசோரம் கருதப்படுகிற நிலையில் பிரித்தளிக்கப்பட்டது என்ற உண்மையும், மூன்றும் உலக நாடுகளுக்கு இராசிவின் மீது நம்பிக்கையில்லாமல் செய்துவிட்டன. எனவே, இந்நிலையில் தோல்வியுற்றுப்போன

இராசிவ் அராரியில் நடந்த கூட்டுச்சேரா நாடுகளின் எட்டாவது மாநாட்டில் பேசும் பொழுது ஏதோ பெரும் புரட்சிக்காரர்போல், தென்னாப்பிரிக்க விடுதலைக்காகவும், நமீபிய விடுதலைக்காகவும் வரட்டுக் கத்து கத்தினார். 'No men is free until every man is free' (தனி மாந்தன் ஒவ்வொருவனும் விடுதலை பெறுகிற வரை அனைத்து மக்களும் விடுதலைப் பெற்றதாகக் கூற முடியாது)-என்று பேசியது இராசீவின் மீது சில நாடுகளுக்கு நம்பிக்கை ஏற்பட வாய்ப்பாக அமைந்தது.

அதன் அடிப்படையில் தம் புகழை மீண்டும் உலக உச்சியில் நிறுத்தத் துடித்துக் கொண்டிருந்த இராசீவ்; தம்மை 'இராச் காட்டில்' பெரிய திட்டமிட்டுச் சுட இருந்ததிலிருந்து தாம் தப்பித்ததாகக் கூறி, அடுத்தநாளே ஆசுத்திரேலியா சென்று பெருமையடித்துக் கொண்டார்.

இந்நிலையில் கூட்டுச்சேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை இழந்து, தனியே இந்தியத் தலைமை அமைச்சர் எனும் பெயர் மட்டும் இருப்பது இராசீவிற்கு நிறைவளிக்காமல், அதிகார வெறிபிடித்து அலைந்தார்.

இறுதியாக, த் தெற்காசியக் கூட்டுறவு அமைப்பையேனும் வலுவுள்ளதாக அமைத்து, அதற்குப் பொறுப்பேற்க எண்ணினார் அவர். (இங்கு நாம் இன்னொரு கோணத்திலும் இதைப் பார்த்தல் வேண்டும் அஃதாவது இராசீவ் எந்த அமைப்பிற்குத் தலைவராகப் பொறுப்பேற்கிறாரோ அந்தக்காலம் வரைதான் அவ்வமைப்பு இந்தியாவில் நன்கு விளம்பரப்படுத்தப்படுகிறது. அவர் கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பின் (NAM) தலைவராக இருந்த காலம் வரைதான் அதைப் பற்றியான செய்தி அதிகம் பரப்பப்பட்டது. அதன்பின் அவர் தெற்காசிய நாடுகளின் கூட்டுறவு அமைப்பிற்குத் (SAARC) தலைமை ஏற்றவுடன் அதுவே விளம்பரப்படுத்தப்பட்டது.) இந்நிலை தெற்காசிய நாடுகளின் அமைப்பை வலுப்படுத்த சில அரசியல் பின்னணிகள் ஏந்தாக அமைந்திருந்தது இராசீவிற்கு.

தெற்காசிய நாடுகளின் கூட்டுறவு அமைப்பு(SAARC):

இவ்வகையில் வலுவான ஏற்பாடு செய்யப்பட்டு வந்த தெற்காசிய நாடுகளின் கூட்டுறவு அமைப்பின் பெங்காளூர் மாநாட்டின் பின்னணித் தேவைகள் நிறைய இருந்த போதிலும், அவற்றுள் முதன்மையானவை.

1. ஏழு நாடுகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பிற்கு (குறிப்பாக தாம் எதிரி நாடாக அறிவித்துக் கொண்டிருக்கிற பாக்கித்தான் இணைந்த கூட்டமைப்பிற்கு)த் தலைவர் ஆகின்ற சூழ்நிலையை இழக்க விரும்பாமை.

2. கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பில் இராசீவின் திறமை புறந்தள்ளப்பட்ட சூழ்நிலையைச் சரிகட்டுவதற்கு ஒரு வடிவாக இஃது அமைந்தமை.

3. இந்தியாவிற்கு உள்ளே இருக்கிற தேசிய இன எழுச்சிகளை ஒடுக்குவதற்கான சரியான திட்டமாக இஃதை எண்ணியமை (இன்றளவும் தேசிய இன எழுச்சியாளர்கள் அருகில் உள்ள நாடுகளில் சென்று தங்களை வலுப்படுத்திக் கொள்ளுகிற நிலையைத் தடுக்கவும், ஆளும் வட்டம் கூட்டுறவு அமைப்பில் பெருகப் பெருக, உள்நாட்டு இன எழுச்சியாளர்களை ஒடுக்குவதும் எளிய எனும் எல்லை நோக்கில்)

4. இந்தியாவைத் தவிர பிற அனைத்துச் சிறிய நாடுகளிலும் இந்திய முதலீட்டைப் போட்டுச்சுரண்டுவது.(இன்றைக்கு இந்தியாவில் பிற நாடுகளின் சுரண்டல் இருப்பதுபோல்)இச் சுரண்டல் நேரடியாக அரசு வழியாக மட்டும் அல்லாமல் தனி முதலாளிகளுக்கும் ஆக்கம் தருவதாக அமைப்பது; அதன்வழி என்றென்றைக்கும் இந்தியாவின் முதலாளிகளுக்கு நண்பராகவே இருப்பது

-இங்ஙனம்- வெறித்தனமான திட்டமைப்பில் இம் மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார் இராசீவ்.

வெங்காலூர் மாநாடும், அதிகார வெறியும்:

இவ் வகையில், இம்மாநாடு நடக்க இருந்த ஒரு மாதத்திற்கு முன்பாக இருந்தே அம் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

நகரின் முகாமையான சாலைகள் புதுப்பிக்கப்பட்டன; கட்டடங்கள் வெள்ளையடிக்கப்பட்டன; சாலை விளக்குகள் அனைத்தும் புதிதாகப் போடப்பட்டன. கால நிலைக்கு உரியன அல்லாத பூச்செடிகள் எல்லாம் வழிநெடுக நடப்பட்டிருந்தன; அனைத்துக்காவல் வண்டிகளுக்கும் வண்ணம் அடிக்கப்பட்டன; காவல் மிதியுந்துகள்

புரப்பாளர் வாழ்க!

அண்மையில், மலேசியா சோகூர் பாருவிலிருந்து வணிகத்தின் பொருட்டுத் தமிழகம் வந்த திரு. பொ. பாலகிருட்டிணனார், அவர்கள்தம் நெடுநாளைய தென்மொழித் தொண்டை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஆசிரியர் அவர்களை நேரில் கண்டு உரையாடி மகிழ்ந்து அவர் வருகையின் நினைவாக உரு 1000- (உருபா ஆயிரம்) நன்கொடையாகவும் புரப்பாளர் தொகையாகவும் ஆசிரியரிடம் கொடுத்தார். அவரின் ஆர்வத் தமிழ் நெஞ்சத்தையும் அருள் உள்ளத்தையும் தென்மொழி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துரைக்கிறது.

- அமைச்சர்.

(Bullets) புதியதாக 36 வாங்கப்பெற்றன; இப்படி வெங்காலூரே புதுமைப் பொலிவுடன் திகழ இரண்டு கோடியே ஐம்பது இலக்கம் உருபாவை வெங்காலூர் நகராட்சிக்கு நடுவண் அரசு வழங்கியதாகச் செய்தி கூறுகிறது. கருநாடக அரசுக்கு வழங்கப்பெற்ற தொகை கணக்குக் கூறப் பெறவில்லை.

ஆனால் இங்ஙனம் ஆளுமை வெறிபிடித்தலைந்த இராசீவ் காந்தியின் திட்டங்களை வெங்காலூர் நந்திமலையில் இருந்த குரங்குகள் விளங்கிக் கொள்ளவில்லை. இந்த வெளிநாட்டு 'முதலை'கள் வந்து தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த நந்திமலை குரங்குகளும், பாம்புகளும் நிறைந்த இடம். எனவே ஒரு மாதத்திற்கு முன்பாகவே அனைத்துப் பாம்புகளும் கொல்லப்பட்டன. ஆனால் குரங்குகளை மட்டும் எதுவும் செய்யமுடியவில்லை. அவற்றைத் துரத்தியடித்த நிலையில் அவை ஊருக்குள் சென்று நிறையத் தொல்லை கொடுத்தன.

ஒரு வழியாக அவற்றின் தொல்லைகள் ஒடுக்கப்பட்டபின், நந்திமலைக் குடியிருப்பு சீரமைக்கப்பட்டபின், அங்கு வந்து தங்குகிற வெளிநாட்டுத் தலைவர்களின் மனைவிகள் அங்கேயே இருந்து தொல்லைப்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, தலைவர்கள் மாநாட்டிற்குப் போனபின், அவர்கள் திருகிறக்கை(Helicopter)-யில் நகரைச் சுற்றிப் பார்த்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதற்கெல்லாம் மேலாக அதிகார வெறித்தனத்தில், வெங்காலூரில் இருக்கும் தமிழர், சீக்கியர்கள் வீடுகள் ஒவ்வொன்றுகப் புகுந்து ஆய்வு செய்யப் பெற்றது. புதிதாக வெங்காலூர் வரும் தமிழர், சீக்கியர்கள் தொடர்வண்டி நிலையம், உந்து வண்டி நிலையங்களிலேயே ஆய்வு செய்யப்பட்டனர். வேட்டை நாய்களை இழுத்துக் கொண்டு ஆளுமை வெறியர்களின் கூலிப்பட்டாளங்கள்(இராசிவின் சிறப்புக் கூலிப்பட்டாளமான 'கருப்புப் பூனை'(Black cat)ப்பட்டாளமாகத் திரிந்தன. ஆய்வுக் கருவிகள், (Metal Detector) நகர் முழுமையும் கொண்டு செல்லப்பெற்று ஆய்வு செய்யப் பெற்றது. சிறப்புக் காவலர்களும் நடுவண் அரசுக் காவலர்களும் துமுக்கிகளைத் தூக்கிக் கொண்டு வெறிநாய்களாகச் சுற்றினர். மாநாடு நடக்க இருந்த 'விதன் சவுதா' உள்ள பகுதிக்கு எவரும் ஒரு கிழமைக்கு முன்பே செல்ல இசைவளிக்கப்பட வில்லை.

இந் நிலையில் முன் கூட்டியே தமிழர்கள் பலர் தளைப்படுத்தப்பட்டனர். திரு. செயவர்த்தனாவிற்கு எதிர் அறிக்கை கொடுக்க இருந்ததாகவும், இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை வெளியிட இருந்ததாகவும் மூவர் சிறையிலடைக்கப் பெற்றனர்.

இந்நிலையில் நகரில் சுற்றிக் கொண்டிருந்த ஏழை எளியவர்கள் எல்லாரும் பிடிக்கப்பட்டு, ஏதிலியர் விடுதிகளில் அடைக்கப்பட்டனர். 300-பேர்கள் மட்டுமே தங்கக்கூடிய இடங்களிலெல்லாம்

600-பேர்கள் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு உணவு என்பதெல்லாம் கொடுக்கப் பெறுமல் விலங்குகளாய் நடத்தப்பட்டிருக்கின்றனர்.

இச் சூழல்கள் வெளியில் அதிகமாகத் தெரியக் கூடாது என ஏறத்தாழ 1000-கலைஞர்கள் கலந்து கொள்ளும் வகையில், ஒரு கலை விழாவை ஏற்பாடு செய்திருந்தனர். அதன் அமைப்புப் பொறுப்பைத் தமிழ்நாடு தலைமையில் இருந்த தென்மண்டிலக் கலைக்குழு ஏற்பாடு செய்திருந்தது. அதை நான்கு முதலமைச்சர்களும் தொடங்கி வைப்பதாகத் திட்டமிடப்பெற்றது. ஆனுல் தமிழக முதலமைச்சரும், கருநாடக முதலமைச்சரும் வந்திருந்தனர். இக் கலைவிழாவிற்கு உரு. 60-இலக்கம் ஒதுக்கப்பட்டது.

இவையன்றி இந்திய மொழித் திரைப்படங்கள் திரையிட்டுக் காட்டுவதாக இந்தியத் திரைப்பட வளர்ச்சி நிறுவனம் பொறுப்பேற்றுப் பல இலக்கம் உருபா செலவில் ஒரு கிழமை இவ்விழாவை நடத்தியது.

கூட்டுறவு அமைப்பும், அதன் திட்டமும்:

இவ்வகையில் முதலாளிய, கொடுநெறியாளர்களின் கொட்டத்திற்கெனவே அமைக்கப்பெற்ற இக்கூட்டுறவு அமைப்பில் கலந்து கொண்ட நாடுகள் ஏழு. அவை **இந்தியா, பாக்கித்தான், வங்காள தேசம், பூடான், மாலத்தீவு, நேப்பாளம், இலங்கை.** இவை யாவும் ஒரு காலத்தில் 'பரந்த இந்தியா'வில் இருந்த நாடுகள்தாம். பழைய உறவில் ஒட்டிக் கொண்ட இவை ஒவ்வொன்றிற்கும் இக் கூட்டுறவு அமைப்பின் வழி சில அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. மேலும் இக் கூட்டுறவு அமைப்பில் இணைவதற்காகச் சில நாடுகளும் இருக்கின்றன. அவை-பர்மா, தாய்லாந்து, ஆப்கானித்தான் இந்தோனேசியா-என்பன.

இக் கூட்டுறவு நாடுகள் கடந்த ஆண்டுகளில் கூடிய பொழுது கீழ்க்காணும் ஒன்பது நிலைகளிலும் உடன்பாடு செய்யப்படுவதென உறுதி மேற்கொண்டன.

1) உழவு, 2) வானியல் ஆராய்ச்சி, 3) உடல்நலம், மக்கள் தொகைப் பெருக்கக் கட்டுப்பாடு 4) அஞ்சல் தொடர்பு 5) சிற்றூர் முன்னேற்றம் 6) அறிவியல் - தொழில்நுட்பவியல் 7) தொலைத் தொடர்பு 8) போக்குவரத்து 9) விளையாட்டு, கலை, பண்பாடு.

அதன் பிறகு அவ்வேழு நாடுகளின் தேவைக் கேற்ப மேலும் மூன்று குறிக்கோள்கள் மேற்கொள்ளப்பெற்றன. அவை,

10) பெண்கள் முன்னேற்றம் 11) மயக்கப் பொருள் பயன்படுத்தம்- கடத்தலைத் தடுத்தல், 12) தீவிரச் செயல்பாட்டினரை ஒடுக்குதல்.

-இங்ஙனம் கட்டமைக்கப்பெற்ற பன்னிரண்டுசெயல்பாட்டுத் திட்டங்களிலும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொன்று முகாமைத் தேவையாக இருந்த காரணத்தினல் அந்நாடுகள் இக்கூட்டமைப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயல்பட்டன.

அவ்வகையில் இந்தியாவைப் பொறுத்த வகையில், இந்தியாவை எப்படியேனும் கட்டிக் காத்துத் தற்சுரண்டல் என்பதற்கான திட்டவமைப்பிலேயே அனைத்துச் செயல்பார்டுகளையும் மேற்கொண்டது-இந்தியா.

இந்நிலையில் ஏற்கனவே முடிவெடுக்கப் பெற்ற நிலையில்,

0 வணிக நிலையில், இந்தியாவிற்குள் இவ்வுறுப்பு நாடுகள் மூலப் பணத்தைப் போட்டுத் தொழில் தொடங்கிச் சுரண்டிக் கொண்டு செல்லவும், இந்தியா பிற நாடுகளில் மூலப் பணத்தைப் போட்டுச் சுரண்டிக் கொண்டு வரவுமான திட்டங்கள் நடைமுறைக்கு உறுதிசெய்யப் பெற்றன.

0 தங்கள் தங்கள் நாட்டிலுள்ள அறிவியல், கலையியல், தொழில் நுட்பவியல், மருத்துவயியல் பிற அனைத்துத் துறைநிலையிலும் சிறந்த அறிஞர்கள் மற்ற நாடுகளுடன் மாற்றிக் கொள்ளவும் அதன் வழி அனைத்து ஒட்டுறவுகளை ஏற்படுத்திக் கொள்வது மான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பெற உறுதி செய்யப் பெற்றன.

0 தம்தம் நாடுகளின் கலைத்துறை நிகழ்ச்சிகளை, முகாமையான சிற்றூர்ப்புறக் கலை நிகழ்ச்சிகளை- மற்ற நாடுகளில் சென்று நிகழ்த்திக் காட்டுவது. அதன் வழி நாட்டு மக்களைக் கவர்ந்து ஆசிய மக்கள் என்ற ஒருமையுணர்ச்சியை ஏற்படுத்துவது என்பது உறுதி செய்யப் பெற்றது.

-இதுபோலும் ஏராளமான திட்டங்கள் நடைமுறைப் படுத்துப்பட உறுதி செய்யப் பெற்ற பொழுதும், இன்றைக்குப் பாக்கித்தான், இந்திய உறவுக்குத் தடையாக இருக்கிறபடியான சிக்கல் தீர்க்கப்பெற வேண்டிய பேச்சுக்குத் தடையாக இருந்த,

0 சம்மு-காசுமீர எல்லை.

0 பஞ்சாப்- சீக்கிய தீவிரர்கள் பாக்கித்தானில் பயிற்சி அளிக்கப் படுவதான செய்தி.

-போன்றவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற பொழுது, பாக்கித்தான் பஞ்சாப் தீவிரர்களுக்குத் துணை நிற்கக் கூடாது என இராசிவ் உலக ஒன்றியத்தின் 2625-ஆம் தீர்மானத்தைக் காட்டியே தமிழ்ப் போராளிகளையும் தங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

(உலக ஒன்றிய 2625-தீர்மானம்:

'சட்டத்திற்குப் புறம்பான நிலையிலோ. தீவிர நிலையிலோ எந்த ஒரு நாடும் மற்ற நாட்டுத் தீவிரர்களைத் தூண்டிவிடவோ துணையிருக்கவோ கலந்து கொள்ளவோ செய்தல் கூடாது.)

இந்நிலை இராசீவிற்கு, மிகுந்த இக்கட்டைத் தந்த போதும் உடனே 'தீவிரம்' அல்லது 'வன்முறை' (Terrorism) என்பது 'எது?'- என்பது பற்றி நாம் முடிவெடுத்தல் வேண்டும்'' என்றார்.

-அதன்படி பல ஆய்வுகளுக்குப் பின்னர், இராசீவ் தீவிரம் என்பது மூன்று வழிகளில் செயல்படுவதுதான்,

1) கடத்திச் செல்வது(வானூர்தி போன்றவற்றை),
2) ஆட்சிகளைக் கடத்தி வைத்துக்கொண்டு மிரட்டுவது,
3) உயர் அதிகாரிகள், பதவியினரைத் தாக்குவது.

-என்று வரையறைப் படுத்தினார்.

-இதனால் ஓரளவு தம் நிலையைச்சிறிது காத்துக் கொண்டாலும் செயவர்த்தனாவின் விடாப்பிடியான கேள்விக் கணைகளுக்குப் பின்னர், இராசீவ் தம் வெளியுறவு அமைச்சர் வழி, ''இங்கு ஈழப் போராளிகள் பயிற்சி எடுப்பதோ, அதற்கு எங்கள் துணையிருப்பதோ, சரியான செய்தி அன்று; அப்படி அவர்கள் செய்வார்களானால் நாங்கள் அவர்களை உங்களிடம் ஒப்படைக்கிறோம்''- என்று உறுதியாகவே கூறினார்.

இப்பேச்சுகளுக்குப் பிறகு, இராசீவ் தமது இறுதியுரையில் மிகவும் தந்திரமாகத் தீவிரம்-பற்றி எதுவும் அதிகம் பேசாமல், 'தீவிரம் என்பது ஒரு கோழைத்தனமான வெறி' என்று கூறினார். அவர் மேலும் தம் இறுதி பேச்சில்,

''இந்த நாள் மிகவும் சிறந்த நாள், கார்த்திகை பூர்ணிமா நாளும், முகமதுநபிகள் பிறந்த நாளும், குருநானக் பிறந்தநாளும் ஆகும். இந்நாளில் நாம் மாநாடு திகழ்வது மிகவும் சிறந்தது. தெற்காசிய மக்களை உயர்த்துதல் வேண்டும் என்பதே நம் நோக்கம், அவர்களை உயர்த்துவது என்பது பொருளியல் வளர்ச்சி குமுகாயத் திட்டங்கள், கலைத்துறை வளர்ச்சி என்ற வகையில் அமைத்தல் வேண்டும்.'' என்றார்.

தொடர்ந்து ''எளிமையான மாற்றுதல்கள் அளவில் அறிஞர்கள், கலைஞர்கள், உள்துறையினர், இதழ்ச் செய்தி ஆசிரியர்கள் பணியாளர்கள், வணிகர்கள், சுற்றுலா விரும்பிகள் ஆகியோர் இந் நாடுகளுக்கிடையில் மாற்றிக் கொள்ளப் பெறுதல் வேண்டும். மயக்கப் பொருள் விற்பனையர்களைத் தளைப்படுத்தல் வேண்டும்.

-இவ்வகை ஆசிய மக்கள் வளர்ச்சியில் குழந்தைகள் மிகமிக இன்றியமையாதவர்களாகையால், எதிர்காலக் குழந்தைகள் இதே சிந்தனையில் வளரவேண்டுமாய் அனைத்து நாடுகளுக்கும் பொதுக்கல்வி, குழந்தைப் பாதுகாப்பு, கல்வி நிலையங்கள் ஆகியவை கி. பி. 2000-த்திற்குள் அமைக்கப்பெறுதல்வேண்டும்.''

-என்று பலவாறு கூறிவிட்டு, இறுதியாக முடிக்கும் பொழுது 'பொதுவாக' தென்னிந்தியாவில் யாரும் 'போங்கள்' என்று கூற மாட்டார்கள், 'போய் வாருங்கள்'-என்றே கூறுவார்கள்;

(தொடர்ச்சி 8- ஆம் பக்கம்)

ஒலிப் பெயர்ப்புக்கு தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தும் முறை பற்றியவை அடுத்த இதழில் வெளியிடப்படும்.

அறிவர் **வீ. பா. கா. சொல்லழகன் (சுந்தரம்)** பசுமலை **625004.**

பின்குறிப்பு:—

"ஆதி" என்பது தமிழ்ச்சொல் என்று 30 ஆண்டுக்கு முன் நூலில் வெளியிட்டுள்ளேன். செல்வியில் கட்டுரைத்துள்ளேன். (கேள்வி. 18 காண்க)

0: 1182: மதிப்பிற்குரிய ஆசிரியர் அய்யா அவர்கட்கு வணக்கம். "இந்தியா ஒன்ருக இருக்கும் வரை, இந்துமதம் இருக்கும்; இந்துமதம் இருக்கும் வரை ஆரியப் பார்ப்பன வல்லாண்மை இருக்கும்; இந்நிலையில் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ' முன்னேற்றம் தமிழ்நாட்டு விடுதலை ஆகியவற்றிற்கு ஆரியப் பார்ப்பனர்களால் பெருந்தடை இருந்தே தீரும்" எனத் **தென்மொழி** பறைசாற்றுகிறது. தனி வாழ்நிலம் கோருகிறது.

இந்தியாவிற்குத் தொடர்பில்லாத, ஈழமக்கள் மேலும் உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் இந்துமதத்தை ஏற்காமலா இருக்கிருர்கள்? இவர்களெல்லாரும் ஆரியப் பார்ப்பனரை உயர்சாதிக் குடியாக ஒப்புக் கொள்ளாமலா இருக்கிருர்கள்? எனவே இந்தியா ஒன்ருக இருக்கும் வரைதான் இந்துமதம் இருக்கும் என்பது ஏற்புடைய கொள்கையன்று. வடவர்களே விரும்பித் தமிழர்களுக்காகத் தனித் தமிழ்நாடு கொடுத்தாலும், அங்கும் ஆரியப் பார்ப்பனரின் வல்லாண்மை மிக்க, இந்துமதம் இருந்தே தீரும். மதப்பூசல்களும் குலக் கொடுமைகளும் மலிந்தே இருக்கும். ஆரியப் பார்ப்பனர்களோடு, சாதி இந்துக்கள் இணைந்து இந்து மதத்தைக் கட்டிக் காப்பாற்றி வருகிருர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே தமிழுக்கும் - தமிழருக்கும் - தமிழ்நாட்டிற்கும் கேடு பயக்கும், ஆரியப் பார்ப்பனர்களை, உயர்சாதியாகப் பறைசாற்றும் இந்து மதத்தை விட்டுத் தமிழர்கள் வெளியேருதவரை, தமிழருக்கு விடிவு இல்லை, விடுதலை இல்லை என்பதே உண்மை நிலையாகும்.

நேராக உண்பதை விட்டுத் தென்மொழி தலையைச் சுற்றி உண்ணக் கொள்கை படிக்கிறது. தென்மொழி சிந்திக்குமா?

உண்மையுள்ள,

துப்பாக்கி **தி. அன்பழகன், திருச்சி-16.**

0: 1183: அன்பார்ந்த ஐயா, வணக்கம். தாங்கள் நடத்தவிருக்கும் **'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு'** பற்றியறிந்தேன். கடந்த காலங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளைப் போலவே இதுவும் வீணுய்ப் போகும் என்பதைத் தாங்கள் நன்கறிவீர்கள் என்பது எனக்குத் தெரியும். எனினும் வழக்கம் போல, தங்கட்குத் தனிப்பட்ட முறையில் சில நன்மைகள் விளையலாம்!

தாங்கள் எண்ணியிருந்தால்- மூன்று தாளிகைகளைக் கையில் வைத்துக் கொண்டு- மிகச் சிறப்பாக இயக்கத்தைக் கட்டிக் காத்து வளர்த்திருக்கலாம். வீணுக்கி விட்டீர்கள்! மேலும், அதே பணியைத் திரும்பவும் செய்யப் போகிறீர்களா? தாங்களே எழுதியுள்ளது போல மெய்த்தொண்டர்கள் அதிகம் இல்லாமல் எவ்வாறு இச்செயலில் இறங்குகிறீர்கள்? போதிய காலமும் பொருளும் இல்லாமல் கருத்தரங்கு நடத்தி என்ன விளைவைக் காணப் போகிறீர்கள்?

நடக்கின்ற இந்தி எதிர்ப்புப் போர்கள் போதாவா? தங்களையும் ஒரு தொண்டராக நினைத்து ஊர்தோறும் இயக்கத்தை வலிமைப்

படுத்திக் கொள்கையைப் பரப்பியிருந்தால் மெய்த் தொண்டர்கள் பெருகியிருப்பார்கள். வழக்கமான அரசியல் தலைவர்களைப் போலவே தாங்களும் ஆகிவிட்டீர்கள் என்பதை எண்ணி வருந்துகிறேன். அவர்களைப் போன்ற வலிமை இருந்திருந்தால் தாங்கள் எப்படியிருப்பீர்களோ? இன்றைக்கு "ஜ, ஹ, ஷ, க்ஷ, ஸ" ஆகியவற்றைப் பயன் பயன்படுத்தலாம்' என்பது போலும் அடிப்படைக் கொள்கைக் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறீர்கள் என்பது வேடிக்கையாக இருக்கிறது! அன்பிருப்பதனால், அக்கறையிருப்பதால் இம்மடலை எழுதினேன். நேரில் வாய்த்தால் வருவேன்.

அன்புடன்

—க. தமிழமல்லன், புதுச்சேரி.

0: 1184: பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய அய்யா அவர்கட்கு நெஞ்சார்ந்த வணக்கம். தனித்து நின்று தமிழின மாண்பு காக்க அலலும், பகலும் அயராது தமிழ்ப் பணியாற்றி வரும் தாங்கள், தமிழ்போல என்றும் நலம் விளங்க வேண்டுகிறேன்.

தமிழும் தமிழினமும்- என்றும் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமென்ற அடிப்படை உணர்வுகளை நெஞ்சத்தே தாங்கி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் எனஞல், தமிழ மற்றும் தமிழர் நலம் நாடும் தங்கள் போன்ற நல்லார் பின்னால் அணிவகுத்துத் தொண்டாற்ற வேண்டுமென்ற பேராசையிருந்தும் பின்னால்திரும்பிப் பார்க்கிறேன்; யான் சார்ந்திருக்கும் 'இல்லப் பிணைப்பு' என்னைப் பின்னுக்கு இழுக்கிறது.

இன்றையத் தமிழும் - தமிழினமும் தலைநிமிராது தளர்வுற்றிருப்பதற்குக் கரணியம் ஒரு வகையில் பொருளியல் வீழ்ச்சியுமாகும். பொருளியல் வளர்ச்சி பெற, தமிழகம் தொழில் வளமிக்க மாநிலமாக அமையுமானல் தமிழினம் தலை நிமிரவும் வழி ஏற்படலாம்.

இன்றையத் தமிழரில் மிகப் பெரும்பாலோர் மொழி-இன உணர்வற்ற எடுப்பார் கைப்பிள்ளைகளாகவே உள்ளனர். ஆட்சிக் கட்சியிலும், எதிர்க்கட்சியிலுமிருப்போரில் வாயோயாது புலம்பும் இரண்டகர்கள் தம்மையும் தமிழர்கள் என்றும், திராவிட இயக்கத்தவர் என்றும் கூறிக் கொண்டு, வீடண, சுக்ரீவ, எட்டப்பர்களாயிருந்து தமிழையும் தமிழினத்தையும், வடவர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் ஈடு வைத்துக் காட்டிக் கொடுக்கும் கயமைச் செயலை நாள்தோறும் செய்துவரும் அவல நிலையைக் கண்டு நெஞ்சங் கனலாகிறேன்.

தமிழன் இனமான மிக்கவனாய் தலை நிமிர வேண்டுமென்ற பேராசையோடு அயராது பாடுபட்ட தந்தை பெரியார்தம் பெயரைக் கூறிக்கொண்டு திரிவோர் நிலையெண்ணித் தலை கவிழ்கிறேன். அனைத்தினும் மேலாக வேட்டிக்கும்-சேலைக்கும், காசுக்கும் - கயமைத்தனத்திற்கும் விலையாகி மயக்கத்திலழியும் தமிழின மக்கள்-விழிப்படைவதெப்போது என்ற வினவெழுப்பி அமைதியிழக்கிறேன்.

22-9-86 ஆம் நாள் இவ்வெளியனுக்காகத் தங்கள் கண்ணான நேரத்தை ஈந்து நேருரையாடிய தங்கள் தாயன்பை எண்ணி

(தொடர்ச்சி உள்ளே 22-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, (தமிழகம்)